www.padippakam.com

புதிய நூற்றாண்டுக்குத் தயாராவோம் !

மக்கள் விடுதலை முன்னணியின்
கிளை பிரதிநிதிகள் மாநாடு
ஹம்பாந்தோட்டை மாவட்டம்

பொதுச் செயலாளர்
தோழர் டில்வின் சில்வா அவர்களின் தலைமையில்
ஒக்டோபர் 21 மாலை 2 மணிக்கு
தெபரவெவையில்

# செஞ்சக்தி

செய்திப்பத்திரிகையாக பதிவுசெய்யப்பட்டது

1998 ஒக்டோபர் அணி 03 படை 03 நன்கொடை 7.00 ரூபாய் மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்

### வெள்ளை மாளிகை அதிகாரி 'எரிக் சோட்" சமூகமளித்துள்ளார்!

# அமெரிக்காவில் யானை – புலி பேச்சுவார்த்தை

**கடந்த சில தினங்களாக தமது கட்சிக்கு நிதி சேகரிப்பதாக கூறிக்கொண்டு ஐக்கிய அமெரிக்காவுக்கு பயணம் செய்த ரணில் விக்கிரமசிங்க அங்கு வைத்து எல்.ரீ.ரீ.ஈ சர்வதேச பிரிவின் பொறுப்பான மூன்று தலைவர்களோடு ரகசிய பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாகவும், அப்பேச்சுவார்த்தைகளின்போது எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தின் பிரிவினைவாத குறிக்கோளை வெற்றியடையச் செய்வதற்கு சாதகமான முறையில் ஐக்கிய தேசியக் கட்சி எவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டுமென்ற காரணியே விரிவாக ஆராயப்பட்டதாக மிகவும் நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து 'செஞ்சக்தி" க்கு தெரியவருகிறது.**

இந்த அறிக்கைக்கு ஏற்ப, மேல்கண்ட பேச்சுவார்த்தை நடைபெற்றிருப்பது ஐக்கிய தேசியக் கட்சியில் ரணிலுடன் இவ்விஜயத்திற்கு பிரதிநிதிகளாகச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கும் தெரியாமல் மிக ரகசியமாக நடைபெற்றிருக்கிறது. இப்பேச்சுவார்த்தையை ஏற்பாடு செய்திருப்பவர், ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னால் பிரச்சார ஆலோசகராக செயற்பட்டு இப்போது அமெரிக்காவில் வசிக்கும், நபரே யானை–புலி பேச்சுவார்த்தையும், நிதி சேகரிப்புக்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்துள்ளதாகத் தெரியவருகின்றது.

அதேவேளை இப்பேச்சுவார்த்தையின்போது வெள்ளை மாளிகை அதிகாரி 'எரிக் சோட்'டும் சமூகமளித்ததாகத் தெரியவருகின்றது. மூன்றாம் தரப்பினரின் மத்தியஸ்தத்தோடு எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தின் பிரிவினைவாத நோக்கத்தை நிறைவுசெய்வதற்கேதுவான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது தொடர்பாகவும், அதற்காக ஐக்கிய தேசியக் கட்சி கையாளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆழமாக ஆராயப்பட்டுள்ளது.

எப்படியாயினும் இப்பேச்சுவார்த்தையின்போது இருசாராரும் வந்திருக்கும உடன்பாடு கடைசியாக இன்னும வெளியாகவில்லை. ஆனால், இப்பேச்சுவார்த்தை நடைபெற்றதில் எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தின் குறிக்கோள் தமக்கு இசைவான முறையில் ஐக்கிய தேசியக் கட்சியை செயற்பட வைப்பதே மேலோங்கியிருந்ததாக எமது

7ம் பக்கம் பார்க்க...

### பிரேமதாச கொலை கமிசன் அமைக்கும்படி ரணில் சந்திரிகாவிடம் கோருகிறார்

அரசாங்கத்தின் ஒரு சில செயற்பாடுகளுக்கும் பெகேஜ் மற்றும் சமாதான பேச்சுவார்த்தை போன்ற திட்டங்களுக்கு எதிர்காலத்தில் தமது ஆதரவை பெறவேண்டுமென்றால் பிரேமதாஸ கொலை தொடர்பாக விசாரணை கமிஷன் ஒன்றை அமைத்து, அதன் மூலம் சிரிசேன குரேவுக்கு எதிராக பாரிய தாக்குதலை தொடுக்குமாறு ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட முறையில் சந்திரிகாவிடம் கேட்டுள்ளதாக தெரியவருகிறது.தமது தலைமைத்துவதிற்கு எதிராக சிறிசேன குரே கொண்டுச் செல்லும் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுப்பதற்கு முடியாத ரணில் இவ்வாறு சந்திரிகாவிடம் கேளளடுள்ளார். எப்படியாயினும் முன்னால் வரப்போகும் தேர்தலின்போது தமது வாக்குகளை அதிகரித்துக்கொள்வதை இலக்காக வைத்து குரேவுக்கு எதிராக தாக்குதல் தொடுக்கக் கூடாதென சந்திரிகா பிரிவினர் தீர்மானித்துள்ளனர். அரசாங்கம் தாம் எதிர்பார்த்தது போல் குரேவுக்கு எதிராக அவதூறுகளை தொடுக்காததினால் ரணில் விக்கிரமசிங்க பாரிய நெருக்கடியில் மூழ்கிப்போயுள்ளதாக தெரியவருகிறது.

### இனவெறியைத் துடைத்தெறிவோம்!

முதலாளித்துவ அரசாங்கம் தேசிய பிரச்சினையை வளர்த்து அதிகரித்ததன் மூலம் நடைபெற்றுள்ள பன்முக அழிவுகள் சிங்கள அப்பாவி மக்களை தமிழ் அப்பாவி மக்களுக்கெதிராக ஆத்திரமூட்டும செயல்களை தூண்டிவடுவதால் பயங்கரவாத எதிர்ப்பு இயக்கமும், மற்றும் இனவாத அமைப்புகளும் இனக்குரோதத்தை தூண்டும் செயல்களில் ஈடுபடுவதாக அவ் அமைப்புகளுக்குத் தொடர்பான தகவல் தெரிவிக்கின்றன. தமிழ் இனவாதத்திற்கு எதிராக சிங்கள இனவாதத்தைத தூண்டிவிடுவதால் இவர்களது குறுகிய கீழ்த்தரமான அரசியல்நோக்கத்தைஅடைவதற்காக செயற்பட்டுக்கொண்டிருப்பதால், அது மேலும் தமிழ் இனவாதம் வளர்வதற்கு ஒத்துழைப்பாக அமையுமென்று, இது தொடர்பாக ஆராயும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதனால், இரண்டு முதலாளித்துவ கட்சிகள் மீது அதிருப்தியடைந்துள்ள மக்கள்அதிலிருந்து விடுபடுவதன் மூலம், நாட்டில் தோன்றியுள்ள சமூகமாற்றத்திற்கான சூழலைஇனவெறியால்' மறைப்பதற்கு முடியுமென்று இந்த இனவாத இயக்கங்களை வழிநடத்துவோர் கருதுகின்றனர். எனவே இந்நிலைமையைக் கடுமையாகக்கவனத்திலெடுக்கும்படியும், இந்த இனவெறி பொறியில் சிக்கவேண்டாமெனவும், அதற்கெதிராக தெளிவான அரசியல் அடிப்படையிலிருந்து செயற்படும்படி 'செஞ்சக்திதமது வாசகர்களிடம்கேட்டுக்கொள்கிறது.

### களுத்துறை மாவட்ட பிரதிநிதிகள் மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது!





மக்கள் விடுதலை முன்னணியினால் மாவட்ட ரீதியாக கிளை பிரதிநிதிகளின் மாநாடுகளை நடத்துவதற்கு எடுத்த தீர்மானம் 02ம் திகதி களுத்துறை மாவட்டத்தின் கிளை பிரதிநிதிகள் மாநாடு பாணந்துறை நகர மைதானத்தில் பெருந்திரளான அங்கத்தவர்கள் ஆதரவோடு நடத்தியதோடு ஆரம்பமானது. இச்சந்தர்ப்பத்திற்கு பிரதான அதிதியாக மக்கள் விடுதலை முன்னணி பொதுச் செயலாளர் தோழர் டில்வின் சில்வா அவர்கள் சமூகமளித்திருந்தார். களுத்துறை மாவட்டத்தில் அனைத்து கிளைச் சங்கங்களின் பிரதிநிதித்துவம் செய்து பெரும் திரளான அங்கத்தவர்கள் மாநாட்டில் கலந்துகொண்டனர். இச் சந்தர்ப்பத்திற்கு அரசியல் குழு உறுப்பினர் தோழர் அஜித்குமார, பிரச்சார செயலாளர் தோழர் விமல் வீரவங்ச உள்ளிட்ட பல முக்கிய தோழர்கள் கலந்துகொண்டனர்.

### லலித் அணி உள்ளே யானை கதிரை மோதல்!

ஸ்ரீமணி அத்துலத்முதலி தலைமையிலிருக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உள்ளே உட்கட்சி பூசல் இப்போது உக்கிரமான முறையில் கூர்மை அடைந்திருப்பதாக தகவல்கள் தெரிய வருகின்றது. ரவி கருணா நாயக உட்பட இன்னும சிலர் ஜ.ஐ.தே முன்னணியை ஐக்கிய தேசியக் கட்சி திசையை நோக்கி திருப்புவதற்காக எடுத்த முயற்சியும், ஸ்ரீமணி உட்பட இன்னும் சிலர் அதை பொதுசன ஐக்கிய முன்னணியுடன் தொடர்ந்தும் வைத்திருப்பதற்காக எடுத்த முயற்சி இப்போது இரு அணிகளாக பிளவுறும் பாரிய மோதலாக உருவாகியிருக்கின்றது.

கடந்த வாரம் ஸ்ரீமணிக்கும் ஜீ.எல்.பீரிஸுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின்பு அவர் தொடர்ந்தும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பாதுகாவலராக மாறியிருப்பதாக தெரியவருகின்றது.

உக்கிரமடைந்திருக்கும் இந்நிலைமை எதிர்காலத்தில் முற்றாகவே லலித் முன்னணி சீரழிந்துபோய் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியில் அபேட்சகர்களாகவும் சிலர் பொதுசன ஐக்கிய முன்னணியின் அபேட்சகர்களாக மாறுவது தவிர்க்க முடியாத ஒன்றெனவும் அதனால் லலித் முன்னணி முற்றாக செயலிழந்து அழிந்துவிடுமென்று அரசியல் பேச்சாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### மரணம் 1300!

கடந்த சில தினங்களில் தொடர்ச்சியாக எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்திற்கும் அரச படைகளுக்குமிடையே கிளிநொச்சியில் நடைபெற்ற மோதலில் அரசபடைகள் 1300பேர் இறந்துள்ளதாக இன்டநெட் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### G.S.T. க்கு எதிரான ம.வி.மு.வின் பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

பொதுசன முன்னணி அரசாங்கம் பண்டங்களின் சேவை வரி மூலம் மக்களை வதைக்கும் சட்டத்தை உடனடியாக அகற்றவேண்டுமென்ற பிரேரணை கேகாலை பிரதேச சபைக்கு ம.வி.மு உறுப்பினர் கொண்டுவந்த போது பொ.ஐ.மு. உறுப்பினர்களின் எதுவித எதிர்ப்புமின்றி சபையில் ஏகமனதாக சபையேறியுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



# ஜப்பானில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



படம் - 'இன்டநெட்' மூலம் பெறப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் ஜப்பான் கமிட்டியும், ஜப்பான் கம்யூனிஸட்வாதிகளும் ஜப்பானிய தொழிலாளர்களும் சேர்ந்து செப்.22ம் திகதி டோக்கியோவிலுள்ள இலங்கை தூதரகத்தின் முன்னால் மறியல் போராட்டத்தைத் தயார்செய்தனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் அவசரகால சட்டத்தை அமுல்படுத்தியமை, மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள், பத்திரிகையாளர்களை வேட்டையாடல் என்பனவற்றை கண்டித்தும் உடனடியாக மாகாணசபைத் தேர்தலை நடத்தும்படி பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை வற்புறுத்தி அன்றைய தின மாலை பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

'அவசரகால சட்டத்தை நீக்கு'! 'மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்து' 'நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழி' 'மக்கள் விடுதலை முன்னணி அங்கத்தவர்கள் மீதான தாக்குதலை நிறுத்து' போன்ற சுலோகங்களை ஏந்திய வண்ணம் மக்கள் விடுதலை முன்னணியின் ஜப்பான் கிளையும் கம்யூனிஸ்ட் தோழர்களும் தூதரகத்தினைச் சுற்றி வளைத்திருந்ததாக செய்திகள் தெரியவருகிறது. இத்தாலி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் இதேபோன்று மறியல் நடைபெற்றதாக செய்தி அச்சுக்குப் போகும்போது எமக்குக் கிடைத்த தகவல்கள் உறுதிப்படுத்தின.

# ரக்ஷ்யாவில் மீண்டும் கம்யூனிஸ்ட் ஆட்சி மலர்வது தவிர்க்க முடியாது

கம்யூனிஸட் கட்சி பொதுச் செயலாளர் நிகுலாய் பினுகோவ்...

ஏகாதிபத்திய சார்பு யெல்ஸ்டினின் முதலாளித்துவ ஆட்சியை தகர்த்துவிட்டு மீண்டும் ரஷ்யாவில் கம்யூனிஸ்ட்கள் ஆட்சியை கைப்பற்றுவது குறித்து மக்கள் அதிக நம்பிக்கை கொண்டுள்ளதாக ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் நிகுலாய் பினுகோவ் கூறினார்.

தற்போது முதலாளித்துவ பொருளாதாரத்தைப் பின்பற்றும் ரஷ்ய அதிபர் போரிஸ் யெல்ஸ்டின் ஆட்சிமீது மக்களுக்குப் பாரிய வெறுப்பும் அதிருப்தியும் ஏற்பட்டிருப்பதே இதற்கான முக்கிய காரணமாகின்றது. மேலும் அவர் கூறினார்,

ஆளும் கட்சியை தூக்கியெறிவதற்காக வெகுஜன இயக்கம் நடத்துவதே எங்கள் கொள்கை. ஆனால் அதற்காக ஆயுதம் ஏந்த மாட்டோம். இப்போதைய அரசியல் ஜனநாயக அமைப்புக்களில் கம்யூனிஸ்டுகளுக்கு நம்பிக்கை உள்ளது.

என்றுமில்லாதவாறு கம்யூனிஸ்ட் கொள்கைகளில் மீது மக்களுக்கு ஆழ்ந்த நம்பிக்கையுள்ளது. எனவே இப்போதைய அரசியல் நடைமுறைகள் மூலம் நாம் நிச்சயம் வெற்றிபெறுவதும் தற்போதைய ஆட்சியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள ஏழைகள், நடுத்தரவர்க்கம், அறிவுஜீவிகள் ஆகியோரிடையே கம்யூனிஸ்ட் கட்சி பெரும் செல்வாக்கைப் பெற்று வருகின்றது.

சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிஸ்கட்சி கரைந்ததற்கு ஏகாதிபத்தியவாதிகளின் சதி, சூழ்ச்சி போன்ற காரணிகளே காரணமாயிருந்தது.

முன்னால் அதிபர் மிகையில் கொர்பசேவ் கொண்டுவந்த பெரஸ்த்ரோய்கா (சீர்திருத்தம்) கிளாஸ்நோஸ்த்( வெளிப்படையான நிர்வாகம்) போன்ற நடவடிக்கைகள் செயற்படாத காரணத்தைப் பயன்படுத்திய ஏகாதிபத்தியவாதிகள் சோவியத் ஒன்றியத்தைக் கரைத்தனர்.

இவர்கள், சதிகள் மூலம் நிறுவப்பட்ட ஏகாதிபத்திய சார்பு ஆட்சியால் இன்று மக்களுக்கு எதுவித நன்மையும் ஏற்படவில்லை. மாறாக, வேலையில்லாப் பிரச்சினை, கலாச்சார சீரழிவு, பசி, வறுமை, நோய், பிரிவினை, பயங்கரவாதம் இவைகளையே இவர்களால் மக்களுக்குத் தர முடிந்தன. எனவே, இதனால் தற்போதைய ஆட்சியாளர் மீது வெறுப்படைந்திருக்கும் மக்கள் தமது புனிதமான கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரத்தை நிறுவுவதற்காக சகல வழிகளிலும் செயற்படுகின்றனர். இதனால், கூடிய சீக்கிரம் மீண்டும் கம்யூனிஸ்ட் ஆட்சி மலர்வது ஏகாதிபத்தியவாதிகளினால் ஒருபோதும் தடுத்து நிறுத்த முடியாது என்று மேலும் அவர் கூறினார்.

# சோஷலிச கலைச்சங்கத்தினால் தயாரிக்கப்படப்போகும் சினிமாவுக்கான நிதி திரட்டல் வெற்றியுடன் முன்னோக்கி....

மக்கள் விடுதலை முன்னணியின் சோஷலிச கலைக்சங்கத்தினால் தயாரிக்கப்படவுள்ள சினிமா கதைக்கு தேவையான நிதியை திரட்டுவதற்கான செயற்பாடுகள் இப்போது வெற்றிகரமாக முன்னேறுகிறது. வீதி நாடகம், விடுதலை கீதம் போன்ற காட்சிகளை காண்பித்து மக்கள் நிறைந்த நகரங்களில் மக்களிடம் சென்று ரூபா 20 மதிப்புள்ள டிக்கட்டை விற்பனை செய்கின்றர். இதுவரை காலி, மாத்தறை, குருணாகல, கண்டி, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் சென்று நிதி திரட்டும் வேலைகள் வேகமாக வளர்வதாக சோஷலிச கலைச்சங்கத்தின் பிரதிநிதித் தோழர் ஒருவர் செஞ்சக்திக்கு கூறினார்.

## திக்குவளை பி.சபை தலைவருக்கு பிடியாணை!

திக்குவளை கொன்தெனிய தோட்டத்தில் வசிக்கும் திருமதி குசுமலதா என்ற பெண்ணை பகிரங்கமாக தாக்கியது தொடர்பாக, இத்தாக்குதலுக்கு குற்றவாளியான திக்குவளை பிரதேசபை தலைவர் கிருஷாலி முதுகுமாரன அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தினால் பகிரங்க பிடியாணை பிறப்பித்துள்ளதாக தெரிய வருகின்றது. ஆனால் இன்று இவரை கைது செய்து நீதிமன்றில் ஒப்படைப்பதற்கு திக்குவளை பொலிஸாருக்கு முடியாதுபோயுள்ளது.

## கொடுப்பதாக கூறியதும் கொடுக்கவில்லை

கடந்த சில தினங்களாக ராணுவத்தை விட்டோடிய வீரர்களை பிடிப்பதற்கான நடவடிக்கை ஒன்று பாதுகாப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இராணுவத்தை விட்டோடியோர் பற்றிய தகவல் கொடுத்தால் ரூபாய் 5000 சன்மானமாக தருவதாகவும் கூறப்பட்டது.

இந்த பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சில பொலிஸ் அதிகாரிகளும் ராணுவ வீரர்களும் தப்பியோடிய வீரர்களை பிடிப்பதில் மும்முரமாக செயல்பட்டனர். ஆனால், குறிப்பிட்ட நடவடிக்கை முடிவடைந்து இப்போது மற்றோர் தேடுதல் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இது நாள் வரை கொடுப்பதாக கூறிய சன்மானம் இது குறிப்பிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொலிஸிற்கோ ராணுவ வீரர்களுக்கோ கொடுக்கவில்லை. எனவே, இம்முறை தப்பி ஓடிய ராணுவத்தினரை பிடிப்பதிலிருந்து தப்பி ஓடுவதற்கு தயாராவது வேறுயாருமல்ல பொலிஸாரேயாகும். மேற்கொண்ட சன்மானப் பணம் உயர் அதிகாரிகளுக்கிடையே பகிர்ந்துகொள்ளப்பட்டதாகவும், இதற்காக மும்முரமாக நின்று செயற்பட்ட சாதாரண பொலிசாருக்கு கொடுக்கப்படவில்லையென்றும் தெரிய வருகின்றது. அதனால் இம்முறை தேடுதல் வேட்டை அம்போ கதி!

## அஷ்ரப்பிற்கு உளவு சேவையொன்று!

கொழும்பு துறைமுகத்தில் இரண்டு மண்டபங்கள் கட்டுவதற்கும்,அந்த இரண்டு மண்டபகங்களின் உச்சியில் இரண்டு உளவுபார்க்கும் நிலையங்களை கட்டுவதற்கு துறைமுக புனர்வாழ்வு அமைச்சர் அஷ்ரப் அவர்கள் முடிவுசெய்து அதற்கான வேளைகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அதாவது,மேற்குறிப்பிட்டபடி இரண்டு உளவு நிலையங்களை அமைப்பதென்றால் 'கெபினட்' அனுமதியை பெற்றிருத்தல்வேண்டும்.ஆனால் அமைச்சர் அஷ்ரப் அமைக்கப்போகும் உளவு நிலையத்திற்கு இதுவரை எவரது அனுமதியையும் பெறவில்லை.இது பாரியதோர் சட்டவிரோத செயலென்றும் ,தேசிய பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தலென்றும்,இது தொடர்பாக பலர் கருத்துவெளியிட்டுள்ளனர்.குறிப்பாக,முஸ்லிம் அடிப்படைவாத(ஜியாட்) இயக்கங்ளோடு அமைச்சர் அஷ்ரப்பிற்கு நெருங்கிய தொடர்பு இருப்பதாக அண்மையில் குற்றம்சாட்டப்பட்டிருந்தது அனைவருக்கும் தெரிந்தவிடயம்.எனவே, அவ்வாறான சூழ்நிலையின் கீழ் இப்படி ஏதேச்சனமாக உளவு நிலையததை அமைக்கத் தயாராகிக்கொண்டிருப்பது, என்ன நோக்கத்திற்காக என்ற சந்தேகம் எல்லோரிடமும் வலுப்பெற்நுள்ளதாக துறைமுக தகவல்கள் தெரிவிக்கிறன.

## வெளிநாட்டு தொழில் உத்தரவாதமில்லை!

அண்மையில் ஐக்கிய எமீர் நாட்டில், 'ஜபில் அல் எக்ட்ரகோ' தொழிற்சாலையில் நடைபெறும் அநீதிகளுக்கு எதிராக போராட்டம் நடத்தியமைக்காக 650 பெண் ஊழியர் களை தொழிலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.ஒருமாத சம்பளத்தை மாத்திரம் கொடுத்து தாங்களது உடமைகளை கூட எடுத்து வருவதை தடுத்ததுள்ளனர்.

## எமது உற்பத்திகள் வெளிநாட்டிலிருந்து வேண்டாம!

– ம.வி.மு உறுப்பினரின் பிரேரணை சபையேறியது

இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்தி பொருட்கள் வெளிநாட்டிலிருந்து கொண்டு வருவதற்கு எதிர்ப்பையும் இதனால் உரிய அமைச்சக்திற்கு ஏற்படும் விளைவுகளை அனுப்பும் பிரேரணை ஒன்று கடந்த மாதம் செப்டெம்பர் 25ம் திகதி நடைபெற்ற வலப்பனை பிரதேச சபை கூட்டத்திற்கு மக்கள் விடுதலை பிரதேச சபை உறுப்பினர் கொண்டுவந்த யோசனை எதுவித விவாதமுமின்றி சபையேறியுள்ளது. பிரேரணையை முன்வைத்து ம.வி.மு உறுப்பினர் நீண்ட உரையை நிகழ்த்தி ஐ.தே.க. – பொ.ஐ.மு ஆகிய கட்சிகளை கடுமையாக விமர்சித்தபோதிலும், அவ்விரண்டு கட்சிகளின் உறுப்பினர்கள் எவரும் அதற்கெதிராக வாய்திறக்கவில்லை.

## நெல் கொள்வனவு திணைக்களம் மூடுவிழா!

அமைச்சர் ரத்னசிரி விக்ரமநாயக கூறியபடி இன்னும் இரண்டு மாதத்தில் நெல் கொள்வனவு திணைக்களம் மூடப்படும்.

உலக வங்கியின் தாளத்திற்கு ஏற்ப ஆடுவதைத்தவிர எந்தவிதமான தேசிய பொருளாதார வேளைத்திட்டமும் இல்லாத பொதுசன ஐக்கிய முன்னணி மக்கள் துரோக அரசாங்கம் விவசாயிகளையும் பாவனையாளர்களையும் பலிகடாக்களாக்கி கொண்டுச்செல்லும் ,தேசிய வளங்களை பல்தேசிய முதலைகளுக்கு தாரைவார்க்கும் தனியார்மய நடவடிக்கைகள் மூலம் இலங்கை வாழ்மக்களை அடகுவைக்கும் செயல்பாட்டை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கு சகல முற்போக்குவாதிகளும் ஸ்தாபனபடவேணடுமென்று விவசாய பிரதிநிதிகள் அறைக்கூவல் விட்டுள்ளனர்.


தற்போதைய நெருக்கடியின் முன்னால்
இடதுசாரிகளின் கடமை?

கருத்தரங்கு

☆ ம.வி.மு பிரச்சார செயலாளர் விமல் வீரவங்ச
☆ நவ சம சமாஜக்கட்சி தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன
☆ ஐக்கிய சோசலிச கட்சி செயலாளர் – சிறிதுங்க ஜயசூரிய
☆ தியச ஆய்வு வட்டம் செயலாளர் வசந்த திஸாநாயக்க

ஒக். 23 பி.ப. 2.00 மணிக்கு
இரத்தினபுரி நகரசபை மன்றில்
ஒக். 24 பி.ப 2.00 மணிக்கு
நீர்கொழும்பில்

இக்கருத்தரங்குகளை ஏற்பாடு செய்திருப்பது முறையே ஐக்கிய சோஷலிசக் கட்சியும் நவசம சமாஜக் கட்சியுமாகும்.


படிப்பகம்

www.padippakam.com



# இருப்பிற்கான யுத்தம்

எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்திற்கும் அரசாங்கத்திற்குமிடையே நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தத்தின் இன்னும் ஒரு அபாரமான கட்டம் முடிவுற்றுள்ளது. அரச படைகள் மாங்குளத்தையும் புலிகள் மீண்டும் கிளிநொச்சியையும் கைப்பற்றியுள்ளனர்.

இதனிடையே தமது இருப்பிற்கான போராட்டத்தில் யுத்தத்தை மிக இலகுவாக பயன்படுத்தி அரசாங்கமும் ஐக்கிய தேசியக் கட்சியும் மற்றும் இனவாத சக்திகளும் தமது தேவைக்கேற்ப தேசிய பிரச்சினையைப் பயன்படுத்தி தமது இருப்பை பாதுகாக்கும் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இவ்வாறான நிலைமைகளில்தான் யுத்தம் எத்திசையில் அணிதிரள்கிறதென்பதைப்பற்றிய விரிவான தெளிவான நிலைக்கு வர எம்மை வற்புறுத்துகிறது.

1997 மே 13 திகதியன்று வவுனியாவிலிருந்து யாழ்ப்பாண வரையிலான தரைபாதையை மீட்கப்போவதாக பாரிய சத்தத்துடன் ஆரம்பிக்கப்பட்ட ஜயசிக்குறு (வெற்றி நிச்சயம்) இன்று ஒரு வருடமும் நான்கு மாத காலத்தில் மாங்குளம் வரையிலான தட்டான் தரையை மாத்திரமே கைப்பற்ற முடிந்திருக்கிறது. அரசபடைகளுக்கு மாங்குளத்தைக் கைப்பற்ற விடாது பாரிய தாக்குதலில் ஈடுபட்டிருந்த எல்.ரீ.ரீ.ஈ இயக்கம் கடைசியாக ராணுவம் பாரிய படை நகர்வை மேற்கொள்ளத் திட்டமிட்டபோது ராணுவ தந்திரோபாய ரீதியில் அதை விட்டு விலகி மிகவும் முக்கிய நகரமான கிளிநொச்சியை பாரிய அழிவுகளோடும், அழிவை ஏற்படுத்தி கைப்பற்றிக்கொண்டனர். 1998 மார்ச் மாதம் 14ம் திகதி முதல் 6 மாதங்களாக மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்காக யுத்த முனையில் செயற்பட்ட அரச படைகள் இறுதியாக அதைக் கைப்பற்ற முடிந்திருப்பது தமது முக்கிய முகாமான கிளிநொச்சியை புலிகளிடம் ஒப்படைத்ததன் ஊடாகவேயாகும்.

யுத்தத்தின் 'வெற்றி' யை பிரகடனம் செய்யப்பட்டது. அதன் பின்பேயாகும். அவ்வாறான அழிவுகளின் பின்பு இலங்கை அரசியல் தளத்தில் பல கருத்துகள் இன்று யுத்தமாக மாறியுள்ளது. அவைகளே இப்போது மேடையேறிக்கொண்டிருக்கின்றன. ஆனால், அவைகள் அனைத்தும் உண்மையான அரசியலை பிரதிபலிக்கும் தேவைகளோ, யுத்தத்தின் முடிவுக்கோ இலங்கை வாழ் மக்களை இட்டுச்செல்லாதுபோலவே, அதற்கான யோசனைகளோ, முடிவுகளோ இவைகளுக்கு பதிலாக தமது இருப்பை உறுதிசெய்வதற்காக அறிக்கைகளே என்பதை மாத்திரம் உறுதியாக கூறமுடியும்.

பிரித்தானியா அல்லது வேறு ஓர் இடத்தில் உலாவிக்கொண்டு மாங்குளம் தொடர்பாக ஜனாதிபதி மக்களுக்குக் கூறிய அறிக்கையிலும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மாங்குளத்தில் சென்று சிங்கக் கொடியை உயர்த்திவைத்து உளறிய யுத்த வெற்றிகள் தொடர்பாக மக்களுக்குக் கூறிய அனைத்தும் வெற்று பம்மாத்துகளாகும். இதிலிருந்து மாறுத் திசையில் சென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் யுத்த அழிவுகளை சமூகத்தின் முன் கொண்டுவரும் செயலுக்கு முண்டுகொடுத்தனர்.

எப்படியாயினும், கடையில் கருத்துக்கணிப்பின்போது இலங்கை வாழ் மக்கள் மாங்குளத்தை கைப்பற்றியதாலோ அல்லது ஜயசிக்குறுப் நடவடிக்கையின் போது பெற்ற வெற்றியில் ஒன்றுமில்லை என்பது உண்மை.

யுத்தம் மக்களுக்கு அழிவையே தவிர சௌபாக்கியத்தைக் கொண்டிருக்கவில்லை. ஆனால், யுத்தத்தைத் தமது இருப்பாய் மாற்றிக்கொண்டோர் நாளையும் தமது திட்டங்களாக மாற்றி வெற்றி களியாடடத்தில் ஈடுபடுவர்.

அதன் ஒரு பகுதியாக இன்று ரத்வத்தையின் வரவு சாதனமாக உள்ளது. யுத்தத்தைத் தனது எதிர்கால அரசியலுக்காகப் பயன்படுத்திக்கொண்டிருக்கும் பிரதிபாதுகாப்பு அமைச்சர் யுத்த முனையில் நடைபெறும் எதுவித சம்பவங்களையும் தமது எதிர்கால அரசியின் நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதில் முனைப்பாக செயற்படுவார். இதற்கான நல்லதோர் உதாரணமாக, தனது தலைமையின் கீழ் இருக்கின்ற ராணுவம் கிளிநொச்சியில் பாரிய அழிவுகளையும் படும் தோல்வியை சந்தித்தபோதிலும் மாங்குளம் வெற்றியை மாத்திரம் கதைப்பதற்கு மேற்கொண்ட அரசியல் தேவையே அவரை வற்புறுத்தியுள்ளது.

இம்முறை 'சுதந்திர தினத்தை' பாரிய வைபவமாக கண்டி நகரில் கொண்டாடுவதன் மூலம் நாட்டு மக்களிடையேயும், சர்வதேச ரீதியிலும் செல்வாக்கைப் பெற்றுக்கொள்வதற்காகவும், அதனூடாக இலங்கை வாழ் மக்களை தம்மை நோக்க திசை திருப்புவதற்கும் அரசாங்கத்தின் எதிர்கால இலக்கை நிறைவு செய்வதில் பொதுசன முன்னணி அரசாங்கத்தின் தந்திரோபாய செயற்பாடுகளில் முன்னணியில் இருந்தவர் பிரதி பாதுகாப்பு அமைச்சராகும்.

அங்கு வவுனியா-யாழ் வீதியை மீட்டு சமாதானத்தின் சின்னமாக வட-கிழக்கு மக்களோடு சுதந்திரதினத்தை அலங்கார உற்சவமாக மாற்றப்போவதைப் பற்றி அப்போது பிரதியமைச்சர் பேசியிருந்தார்.

ஆனால், அனைத்தும் தலைகீழாக மாறி நாட்டில் தோன்றியுள்ள அரசியல் நெருக்கடிக்கு வழிவிட்டே சென்றது.

அவ்வேளையில் மீண்டும் பொதுசன முன்னணி அரசாங்கம் ஐக்கிய தேசியக் சிங்கள இனவாதிகளுக்கும் தலைதூக்கும் செயற்பாடுகளுக்குச் செப்பனிடப்பட்டது.

கிளிநொச்சி சம்பவத்தின்போதும் மாங்குளத்தைக் கைப்பற்றியதாக அரசாங்கத்தின் அறிக்கையிலும், அவைகளுக்கு முன்பு சம்பவங்களாக நீளும் யுத்த அழிவுகள் தொடர்பான அறிக்கைகளிலும் தொடர்ந்தும் மக்களுக்கு உறுதிப்படுத்துவது இதுபோன்ற சம்பவங்களும் ஊடாக காண முடியும். அவைகளில் பிரதான காரணியாக இருப்பது யுத்தத்தை நடத்திக்கொண்டு அதனூடாக தமது அரசியல் இருப்பை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளும் முயற்சியேயாகும். அப்படியானாலும் யுத்தத்தைத் தமது அரசியல் இருப்பிற்காக பயன்படுத்திக்கொண்டிருக்கும் பொதுசன ஐக்கிய முன்னணியும் அதன் ஆட்சியாளர்களும் தொடர்ந்தும் பாரிய நெருக்கடியில் சிக்குவதை இச்சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன.

எதிர்காலத்தில் இருக்கின்ற அரசியல் இலக்கை நிறைவுசெய்வதிலும், தனிப்பட்ட ரீதியில் தமது இருப்பும் எதிர்கால அரசியல் தேவைகளுக்காக யுத்தத்தை செய்யும் முடிவுகள் எடுக்கின்ற தன்மை இப்போது மக்கள் முன் வந்துள்ளது.

அதாவது, இத்தோல்வியின் மீண்டும் அரசாங்கத்தின் நெருக்கடியின் உச்சத்துக்கே இட்டுச் செல்வது மாத்திரமின்றி, தோல்வியடைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிங்கள இனவாத அமைப்புகளுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் சூழலையும் தோற்றுவித்துள்ளது.

அது இறுதியாக பிரிவினைவாதத்தைப் பலம்பெறச் செய்கின்ற துரதிஷ்ட நிலையை நோக்கி இலங்கை மக்களை இழுத்துச் செல்கின்ற பரிதாபகரமான நிலையாகும்.

எப்படியாயினும் தமது இருப்பிற்காக கொண்டு செல்ல முடியாதபோது பொதுசன முன்னணி அதன் மறுபக்கத்தை நோக்கிச் செல்லுமென்றால் அது பற்றி ஆச்சரியமாவதற்கு ஒன்றுமில்லை. அதுவே, இவர்களின் இருப்பாக உள்ளது. அப்போது யுத்தத்திற்கு பதிலாக சமாதான பேச்சுவார்த்தையும் ஆரம்பிக்கப்படலாம். தேர்தல் வெற்றிகளை எதிர்பார்த்து பலம்பெற முயற்சிக்கும் அரசாங்கம் இவ்வாறான எதிர்பார்ப்புகள்.

இருப்பிற்கான யுத்தம் எப்படியாயினும் மேற்குறிப்பிட்ட நெருக்கடி அராஜகத்தை நோக்கி நகரும் அச்சம் சமூகத்தை நோக்கி பார்த்தவண்ணமிருக்கிறது. அதனுள், பல்வேறு அமைப்புக்கள் தாங்களது குறுகிய அரசியல் நோக்கத்தை நிறைவு செய்து கொள்வதற்காக எத்தனித்த வண்ண முன்னதை காணமுடியும்.

இப்போது ஐ.தே.க மீண்டும் உறுதிப்படுவதற்கான சூழ்நிலை அரசாங்கத்தின் நலிவடைந்த நிலை உந்தலாக அமைந்துள்ளது. அதேவேளை, ஐ.தே.கவில் ஏற்பட்டிருக்கும் பிளவுகள், உடைவுகள் அனைத்தும் ஊடாக அவர்கள் எவ்வளவு தூரம் செல்லமுடியும் என்று சமூகத்திடம் கேள்வியாக உள்ளது.

இவ்வாறு ஐதேகவும் பொ.ஐ.முன்னணியும் நெருக்கடியில் தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலை யுத்தத்தின் ஊடாக சிங்கள மக்கள் மத்தியில் ஸ்தாபனரீதியில் அணிதிரள்வதற்கு முயற்சித்துக்கொண்டிருக்கும் சிங்கள இனவாத இயக்கம் தொடர்பாக கவனத்தில் கொள்ளவேண்டும்.

வட-கிழக்கில் தமிழ் இனவாதத்தின் மூலம் தமிழ் ஈழத்திற்கான செயல்பாடுகள் நீளும் போது அதேபோல் சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தை பரப்பி அதனூடாக தமது நோக்கத்தை நிறைவு செய்து கொள்வதற்காக பல்வேறு இனவாத சக்திகள் முயற்சிக்கின்றன.

யுத்தத்தினால் ஏற்படும் வெற்றி-தோல்விகள் அனைத்தும் வெளிப்படுத்துவது இக்காரணியேயாகும். மாங்குளத்தின் வெற்றியும் கிளிநொச்சியில் ஏற்பட்ட தோல்வியில் சமூகத்தின் இனவாதிகளுக்கு நல்லதோர் இரையாக கிடைத்துள்ளது.

இவைகளுக்கு மத்தியில் யுத்தத்தை இருப்பாக கொண்டுள்ளோருக்கு இன்னுமோர் சிகப்பு விளக்கின் ஒளி தோன்ற ஆரம்பத்திருக்கிறது. அது யுத்தத்திற்கான செலவு 1998 ஆண்டு மாத்திரம் யுத்தச்செலவு 5720 மில்லியன் ரூபாய்களாகும். இவ்வாறான பாரிய செலவுக்கு பொறுப்பாயிருக்கும் பொதுசன முன்னணி அரசாங்கம் அண்மையில் இன்னுமோர் வரவு-செலவுக்கு தோழ்கொடுக்க வேண்டியுள்ளது. பறித்தல், வெட்டுதல் போன்றவை மத்தியில் வரவு-செலவை நிறைவேற்றிக்கொள்வதற்கு இணங்கியிருக்கும் பொதுசன முன்னணி அரசாங்கத்திற்கு இதுவோர் பாரிய சவாலாகும்.

ஆயினும், இவை அனைத்தும் மீண்டும் தீர்மானிக்கப்படபோவது இலங்கை வாழ் மக்களின் உயிர்களின் மீதாகும். யுத்தத்தின் மூலம் அகதிகளாகவும் அழிவுகளுக்குமான சகல சுமைகளையும் சுமக்க வேண்டியிருப்பது இலங்கைவாழ் தமிழ், சிங்கள, முஸ்லிம் அப்பாவி மக்களாகும். எனவே, இவைகளை தாங்கி மௌனமாக இருப்பதல்ல இன்றைய தேவை. அழிவிலிருந்து மீண்டெழக்கூடிய உண்மைகளை மாற்று சக்தியை சூல அணிதிரள் வதே இன்று மக்களுக்கு வற்புறுத்தப்பட்டிருக்கிறது.



www.padippakam.com



## அரசியல் குறிப்பு

# நெருக்கடி

நாளுக்கு நாள் உலகம் முழுவதும் வளர்ந்துகொண்டிருக்கும் முதலாளித்துவ பொருளாதார நெருக்கடி கூர்மையடைந்துள்ளது என்பது தெளிவு. கடந்த வாரங்களில், ஐக்கிய நாடுகள் சபையின் பிரதானி முன்னேறிய முதலாளித்துவ நாட்டு தலைவர்களிடம், முடிந்த மட்டும் உதவிக்கரம் நீட்டுங்கள்! இல்லாவிடில் அண்மித்துள்ள நெருக்கடியை தடுத்து நிறுத்த முடியாதென கெஞ்சிக் கேட்டிருப்பது, வளர்ந்துவரும் தடுத்து நிறுத்த முடியாத நெருக்கடியை அவர் நன்றாக உணர்ந்திருப்பதாலேயே. முன்னுதாரண முதலாளித்துவ அரசுகள் உடைந்து சிதைந்து போயிருப்பது இந்த நெருக்கடியினாலேயாகும். எனவே இந்நெருக்கடி உலகம் முழுவதிலுமுள்ள பொருளியல் வல்லுனர்கள், அரசியல் அறிஞர்களை கால் நடுங்கச் செய்திருக்கின்றது.

இலங்கைக்கு இந்த நெருக்கடி இன்னும் நேரடியாக பாதிக்கவில்லையென இலங்கை முதலாளித்துவ தலைவர்கள் பெருமையடித்துக்கொண்டிருக்கின்றனர். இவர்கள் கூறுவதர்வது, இந்தோனேசியா, மலேசியா, தென்கொரியா போன்ற கனவு அரசாங்கங்கள் கூட நெருக்கடியில் அழிந்து மூழ்கிக் கொண்டிருக்கின்றபோது, 'நாம்'





நேராக அசையாது நிற்கின்றோம். அது ஜனாதிபதி அவர்கள் புத்தி சாதுரியத்தினால் ஏற்பட்டதென அரச ஊடகம் ஊது குழல்கள் புலம்புகின்றன. எப்படியாயினும் உலகம் முழுவதும் வளரும் இந்நெருக்கடி இலங்கைக்கு மாத்திரம் விதிவிலக்காக அமைய முடியாது. ஜப்பானின் யென் நாணயத்தின் வீழ்ச்சியும், ருசியாவின் தேயிலை சந்தை இல்லாது போனதும் போன்ற காரணிகளோடும் முதலாளித்துவ முதலீட்டாளர்களின் பலவிதமான முதலீட்டின் மூலம் இலங்கை முதலாளித்துவ பொருளாதாரம் பாரிய வீழ்ச்சிக்குள்ளாவது எவராலும தடுக்கவோ தவிர்க்கவோ முடியாத காரணியாகும். இதற்கான முடிவுகள் காலம் தான் பதில் சொல்லும். அவ்வாறானதோர் முதலாளித்துவ அமைப்பை ஆட்டம் காணச் செய்யும் பொருளாதார நெருக்கடி எவ்வளவு சீக்கிரம் வரும் என்ற கேள்வி மாத்திரமே இங்கு எழவேண்டிய பிரச்சினையாகும்.

பொருளாதார நெருக்கடி என்பது அரசியல் நெருக்கடியின் பிறப்பென்பது மார்க்ஸிசத்தின் வரைவிலக்கணமாகும். அது இன்று இந்துனேசியாவிலும், மலேசியாவிலும் , ருசியாவிலும் உட்பட இன்னும் சில முதலாளித்துவ நாடுகளில் எம் கண்முன்னே நிறுவப்பட்ட உண்மையாகும். இலங்கையில் இன்னும் பாரிய அழிவைத் தரும் நெருக்கடியாக தோன்றாவிட்டாலும், அது ஆரம்பித்திருக்கின்றது. அதற்கே உரிய முறையில் அரசியல் நெருக்கடியும் முதலாளித்துவ சிறுமுதலாளித்துவ அரசியல் இயக்கங்களில் உள்ளே நீறு பூத்த நெருப்பாக மாறியுள்ளது. இந்நிலைமைகளைத் தெளிவாக புரிந்துகொண்டால் மாத்திரமே, பாரிய அழிவை நோக்கி வளரும் உடைவுகளை சமுதாய முன்னேற்றத்திற்காக சாதகமான வழியில் பயன்படுத்துவதற்கு உரியவர்களாக இருப்போம். இன்று பொதுசன ஐக்கிய முன்னணி என்ற சந்தர்ப்பவாத அரசியல் கூட்டிலும் தோன்றியுள்ள நெருக்கடி பாரிய ஒன்றாகும். அதன் பிரதான முதலாளித்துவ அமைப்பான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்திற்கிடையிலான போட்டி பாரியளவு அதிகரித்துக் காணப்படுகின்றது. கீழ்மட்ட அமைப்புக்களில் தலமைத்துவ போட்டி பரவியுள்ளது. அடுத்த பிரதமராவதற்காக அமைச்சர் ரத்வத்தை அதிகாரப் போட்டியை உக்கிரமாக்கிக் கொண்டுள்ள வேளையில், சந்திரிக்கா அதற்கான சகல தடைகளையும் கட்டியெழுப்பிய வண்ணமிருக்கிறார். அரசியல் அதிகாரமிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைவர்கள் இரண்டாக உடைந்து தமது காய்களை ஒருவருக்கெதிராக ஒருவர் நகர்த்துகின்றனர். இவ்வாறு ஸ்ரீலங்கா கட்சி உள்ளே நெருக்கடி உக்கிரம்டைந்திருக்கும் இதேவேளை பொதுசன முன்னணியில் அங்கம் வகிக்கும் சந்தர்ப்பவாத சிறுமுதலாளித்துவ சந்தர்ப்பவா கட்சிகளுக்கிடையே பேட்டியும் உக்கிரமடைந்துள்ளது. சமச கட்சியில் பட்டி வீரகோனின் தகுதியற்ற தலைமைத்துவத்திற் எதிராக இன்னும் சம்பவங்கள பரிணமிக்காதபோதும், உள்ளே அலையாக மோதிக்கொண்டிருக்கின்றது. சேனவிரத்னாவை 'எம்பாம்' செய்வதற்காக தூக்கு கயிற்



கையில் எடுக்க வேண்டிய நிலைக்கு முழு சமசமாஜ கட் உள்ளாகியிருக்கின்றது. கம் கட்சி உள்ளேயும் இந்திக குணவர்த்தனாவை மைய இந்த சாக்கடை போராட்டத் இறங்கியுள்ளனர். கட்சி அங்கத்தவர்களிடையே பாரி மோதலாக படர்கின்றது. சம

# இனவாத விஷஜந்து மீண்டும் தீண்டுவதற்கு மு

இரத்தினபுரி மாவட்டத்தில் இரண்டு சிங்கள இளைஞர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பின் தமிழ் மக்கள் வாழ்ந்துவந்த பல தோட்டங்களில் குடியிருப்புகள் தீக்கிரையாக்கப்பட்டு ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் அநாதைகளாக, அகதிகளாக பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளப்பட்டனர். இது தொடர்பாக கடந்த ஒரு மாதமாக நாட்டில் ஊடகங்களும் பல்வேறு அமைப்புகளும், தனிநபர்களும் பல்வேறான கருத்துக்களை வெளியிட்டு வந்துள்ளனர். இந்த அழிவுகளைப் பற்றிக் குறிப்பிட்ட ஊடகங்கள் பல்வேறான முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டதினால், இச்சம்பவத்தைப் பற்றி நாட்டு மக்களுக்குத் தெளிவான கண்ணோட்டம் இருக்கவில்லை. மேலோட்டமாக இப்பிரச்சினையைப் பற்றி குறிப்பிடுவதென்றால் இது தனிப்பட்ட தகராறு என்றும், கசிப்பு வியாபாரம் தொடர்பான சண்டையென்றும், சாதி சண்டையென்றும் பெண்களைப் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கும் சம்பவமாகவும், இனவாத இனக்கலவரமென்றும் விபரிக்கப்பட்டது. எனவே, இந்தச் சம்பவம் தொடர்பாக உண்மையான முறையில் கருத்துக்களை வெளியிடுவது தவிர்க்கப்பட்டது. எனவே இந்தக் குறிப்பு அத்தேவையின் நிமித்தம் ஏற்பட்ட பலனாகும்.



இச்சம்பவம் நடந்திருப்பது இரத்தினபுரி மாவட்டத்தில் வடதிசையில் சரியாக சொல்வதென்றால் இரத்தினபுரியிலிருந்து சிவனொளிபாதமலைக்கு செல்லும் வழியில் 10 கிலோ மீற்றர் சென்று மேலும் 17 கிலோ மீட்டர் சென்றவுடன் அமைந்திருப்பதே வெவல் வத்தை பிரதேசமாகும். வேவல் வத்தை தோட்டம் பலாங்கொடை பாதைக்கு அண்மித்த பிரதேசமாகும். தேயிலையும், இறப்பரையும் பொருளாதார வாழ்க்கைக்காக கொண்டுள்ள பிரதேசமென்பதால் சிங்களம், தமிழ் இரு இனங்களும் வாழுகின்றனர். மலையகத்தில் அதிக மழையில் குளிர்ச்சியடைந்திருக்கும் இப்பிரதேசம், மேலோட்டமாக பார்க்கும்போது இயற்கையின் எழிலை ஊடறுத்து விழும் ஏழ்மையே நிறைந்துள்ளது. ஏழ்மை, சுகாதாரம், போக்குவரத்து (போக்குவரத்து நெருக்கடி தொடர்பாக ஒரு காட்சி வேவல்வத்தை, லேனகந்தை போன்ற பிரதேசங்களுக்கு செல்லும் பஸ் வண்டிகளுக்கு பஸ் ஓட்டுனர் (சாரதி) உள்ளே செல்வது கதவு வழியில் அல்ல ஜன்னல் ஊடாகவே புகுவார்கள்) கல்வி போன்ற பிரச்சினைகளின் எதிரொலியாக தமிழ், சிங்கள பாமர மக்களின் உழைத்து ஓய்ந்த வாடிய முகங்களே சான்று. முழுமையாக தேயிலைத் தோட்ட வாழ்க்கையில் அடைக்கப்பட்ட (குறிப்பாக தமிழ் மக்கள்) இந்த சிங்கள தமிழ் மக்களிடையே அச்சத்தை வளர்த்து வாழ் நாள் முழுவதும் துன்பப்பட்டு சேர்த்து வைத்திருந்த ஒரு சில பொருட்களையும் தீயால் இரையாக்கிவிட்ட இந்த அழிவு ஏற்பட்ட விதத்தைப்பற்றி தேடிப்பார்ப்போம்.

இச்சம்பவத்திற்கு மூலகாரணம் யார்? என்னவென்று பலரோடு உரையாடியபோது தெரியவந்த தெளிவான காரணம் இந்த இரண்டு சிங்கள இளைஞர்கள் (அசித-பந்து) என்ற இருவரை கொல்லப்பட்டதற்கான காரணமாக இருப்பது இனவாதமல்ல. கொடிய முதலாளித்துவ அரசாங்கமும் காட்டுமிராண்டி சிங்கள தமிழ் இனவாதிகளினால் தொடர்ந்தும் சிங்கள தமிழ் இனவாதத்தைப் போஷித்து வளர்க்கும் இச்சந்தர்ப்பத்திலும் இக்கொலை சம்பவத்திற்கு இந்த மிலேச்சத்தனமான இன உணர்வு அடிப்படையாக அமையவில்லையென்பது நல்லதோர் சாட்சியாக இருப்பவர் இந்த சிங்கள இளைஞர்கள் இருவரையும் கொல்லப்பட்டவராக கருதப்படும். இப்போது கைதுசெய்யப்பட்டுள்ள வேவல்வத்தை 'குமார்' குடும்பத்தின் அங்கத்தவராகும். இப்போது குறிப்பிட்ட கொலைகள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கும் 'குமாரின்' சகோதரன் எம்மோடு பேசிய தர்மதாச ரஞ்சித் குமாரின் தம்பி, சிறிய தந்தையின் மனைவியின் சகோதரன் மைத்துனர் உட்பட மேலும் பல உறவினர்களும் 9பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதோ அவர் கூறிய கருத்துக்கள் சில : இதுவே எமது ஆரம்ப கிராமம். எமது பாட்டி சிங்களம், எமது பாட்டனார் தமிழர். அதனால் எங்கள் எல்லோருக்கும நன்றாக சிங்களம் பேச முடியும். கொலை செய்யப்பட்ட 'அசித்' எனது நல்ல நண்பர். தோட்டத்திற்கு வந்தவுடன் அவர் முதலில் என்னையே கூப்பிடுவார். எங்கள் இருவரினது நட்பு எவ்வளவு இறுக்கமானதென்றால் கிரிக்கட் விளையாடும்போது அவரது மட்டையை (பெட்டை) எனக்கு மாத்திரம் தான் கொடுப்பார். இக்கொலை சம்பவம் நடந்தபோது நான் இந்த வீட்டில்தான் இருந்தேன். (உடைந்து நொருக்கப்பட்டு தற்காலிகமாக புதுப்பிக்கப்பட் அசித கொல்லப்பட்டுள்ள பரவியபோதும்கூட நான் நம்பவில்லை. (என்னால் அ முடியவில்லை) இது செப்ட திகதியே நடந்தது. 9ம் தி முழுவதும் மக்கள் கூட்டம பந்துவின் உடலைப் பார்க்கச் 9ம் திகதி கவலையில் எம காம்பிராக்களிருந்த பலர் உடமைகளை எடுத்துச் சென்ற ஏதோ ஒரு ஆபத்தான வரப்போகிறதென்று எம்மி அச்சத்தால்(தமிழர்) காடுகளி புகுந்தனர். ஆனால் நாங்க போகவில்லை. 9ம் திகதி பொலிஸாரும் இராணுவமு 40பேர் தோட்டத்திற்கு காடுகளிலிருந்த எல்லோரையு தோட்டத்தொழிற் சா கூட்டிக்கொண்டு வந்தனர். சுமார் 7.30 மணியளவில் கேட்டது. ஆயிரக்கணக்கா வாகனங்களில் வந்தனர். வே பிரதேசத்தில் அவ்வளவு சிங் இல்லை. வெளிகிராமங்களி வந்திருந்தனர். அ அடிவாங்கியது எமது அ தான். பிறகு அவர் தோட்டத்திலிருக்கும் வீடு ஆயுதங்களினால் உ பெற்றோல் ஊற்றி செ அவர்கள் யார் என்று காண முடியாது போய்விட் பிரதேசமுமே மின்சாரம் து இருளில் மூழ்கிக் சம்பவத்திற்குக் அடிப்படையாக அ தனிப்பட்ட காரணம் எம்மோடு பேசிய சிங்கள, கூறினர். தமிழ் ம

படிப்பகம்

www.padippakam.com



...ப் போலவே கம்யூனிஸ்ட் ...ள்ளேயும் எதிர்கால ...மையைப் பற்றி தீர்மானிக்கும் ...மானகரமான நிலையை ...் தள்ளிவிடும் நெருக்கடியாக ...இருப்பதை காணக்கூடியதாய் ...ு. மற்றும், பொதுசன ...முன்னணியின் பாதத்திற்கு ...அடங்கிக் கொண்டிருக்கும் ...் கட்சியான ஸ்ரீமணி ...் முதலியின் லலித் பிரிவிலும் ...ு அவர்களிற்கிடையே ...ு ஒருவர் குத்திக் குதறிவிடும் ...ட்கிரமாகியுள்ளது. ரவி

கேள்விக்குறியாக்கும் நிலைக்கு தள்ளப்படுவது தவிர்க்க முடியாது.

பொதுசன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தனித்தனியாக இவ்வாறான நெருக்கடிக்கு முகம் கொடுக்கும் அதேவேளை, பொதுசன முன்னணி என்றடிப்படையில் முகம் கொடுக்கும் பிரச்சினைக்கு எல்லையே இல்லை. தனியார்மய காரணத்தின்போதும், தீர்வுவாதி போன்ற பிரச்சினைகள் தொடர்பாக பொதுசன ஐக்கிய முன்னணி உள்ளே எழுந்திருக்கின்ற

# ...விடையும்



பிரச்சினை தற்போது படிப்படியாக நிர்வாணமாகிக்கொண்டிருக்கின்றது. சிறந்த நிர்வாணமாக்கப்பட்டுள்ள பிரச்சினை தொடர்பாக பொதுசன முன்னணிக்கேற்ப அது பூரண ஜனநாயகமாகும். எப்படியாயினும் தங்களை மாத்திரம் பாதுகாத்துக்கொண்டு மற்றக் கட்சிகளை பழியிடும் செயலானது முதலாளித்துவத்தின் பிறப்புரிமையாகும். பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் இந்நிமிடத்தில் இதுபோன்ற பிளவுகள் எதிர்காலத்தில் தீர்மானகரமானதோர் அழிவு நிலைக்கு தள்ளப்படுவது எவராலும் தடுக்க முடியாத ஒன்றாகும்.

ஆட்சியதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் அரசியல் அமைப்புக்கு இவ்வாறானதோர் நெருக்கடி நிலவும்போது, வெளியிலிருந்துகொண்டு ஆட்சி அதிகார சுக்கானை கையிலெடுக்க எத்தனித்துக்கொண்டிருக்கும் மற்றைய கட்சிகளை முதலாளித்துவ ஐக்கிய தேசியக் கட்சி இவர்களை விட மோசமான நிலையிலேயே தோய்ந்துகிடக்கிறது. ஒரு புறம், சிரசேன குரே, ஹேமா பிரேமதாஸ போன்ற பழைய பிரேமதாஸவாதிகள் மத்திய கொழும்பில் எரியும் தீயை முழு நாட்டுக்கே மூட்டியுள்ளனர். மறுபுறம் எச்.ஆர் பியசிறி ஓர் புதிய கட்சியை உருவாக்கி ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பாயும் குரங்குகளுக்கு ஏணியாக மாற்றியுள்ளார். மேலும் தெரியவருவதாவது எதிர்காலத்தில் நடைபெறப்போகும் எந்தவொரு தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியில் பலம்வாய்ந்த '9' தலைவர்கள் பொதுசன ஐக்கிய முன்னணியை நோக்கிச் செல்லத் தயாராயிருப்பதாகவேயாகும். இவைகளிடையே பிரேமபால மென்டிஸ், ரணில் விக்கிரமசிங்க தலைமைத்துக்கு எதிராக ஆரம்பித்துள்ள போராட்டம் இவைகள் மத்தியில் மௌனமாக நடந்தவண்ணமுள்ளது. அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பொதுசனமுன்னணியில் சரணடைந்தவருமான அன்று பொதுசன முன்னணியில் அதிருப்தியடைந்துள்ள 'சினிமாத்திரை வீரன்' காமினி பொன்சேகா கூறுவது ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பொதுசன ஐக்கிய முன்னணிக்கு மாறியிருப்பது அதன் 'மேக்கப்' மாத்திரமே என்கிறார். உடை, நடை, பாவனை போன்றவற்றை வெளிப்படையிலான மாற்றங்களில் எதுவித மாற்றத்தில் உண்மையில்லை. காமினி பொன்சேகா கூறுவது இந்த இரண்டு கட்சிகளின் தன்மைக்கு நல்லதோர் உதாரணமாகும். எப்படியாயினும், இவர்கள் கூற்று இக்கட்சிகள் இரண்டிலும் அடிப்படையில் ஒன்றேயாகுமென்றே. உட்கட்சி நெருக்கடியிலும் ஒரே மாதிரியான தன்மை நிலவுவதை நாம் நன்றாக புரிந்துகொள்ள வேண்டும்.

முதலாளித்துவ அரசியல் சக்திகளும் அவைகளுக்கு துணைத் தூண்களாக நிற்கும் அரசியல் சீரழிவில் முன்நிற்கும் அனைத்துச் சக்திகளும் இன்று ஒரே வகையான நெருக்கடியிலேயே அழிந்துபோயுள்ளன. இதனால் பிரதான முதலாளித்துவ சக்திகள் இரண்டு மீதும் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளதால், அவைகளுக்கு விடை தேடி ஓடும் அவலத்திற்கு இப்போது இவர்கள் முகம் கொடுக்கும் பாரியதோர் நெருக்கடியாகும். இந்த இரு முதலாளித்துவ கும்பல் மீது மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை சீர்செய்ய முடியாதென உணர்ந்திருக்கும் இக்கட்சிகள், மாற்று நடவடிக்கைக்கான காய்களை நகர்த்துவதற்கு காய்களை தேடுகின்றனர். இதனடிப்படையிலேயே இனவாத ரீதியில் மக்களை அமைப்புரீதியில் அணிதிரட்டும் 'புலி அழிப்பு' அலங்கார கோஷத்திற்கு மறைந்து இனவாத அடிப்படையில் மக்களைத் தூண்டிவிட்டு வேறு முதலாளித்துவ கட்சியை மாற்றாக மக்கள் மனதில் பதிவு செய்வதற்காக பொறி நாட்டப்படுகின்றது. இவைகளே மாற்று மார்க்கமென்று மக்களுக்கு காண்பித்துக் கொண்டு செல்கின்றனர். ஆனால், உண்மை அவைகள் மாற்றல்ல முதலாளித்துவத்தின் முகத்தின் மாற்றேயாகும்.

இவ்வாறான நெருக்கடியின் முன்னால் சமூகத்திற்கு தேவைப்படுவது முதலாளித்துவ மாற்றமல்ல. யு.என்.பிக்கு பதிலாக பொதுசன ஐக்கிய முன்னணி மாற்றாயிருந்தது. எனவே, யு.என்.பி.ஏ இரண்டு முதலாளித்துவ கட்சிகளிடமிருந்து மீண்டு இனவாத அமைப்புகளை தேர்ந்தெடுப்பதால் புதிய மாற்றமோ பலனோ ஏற்படப்போவதில்லை. பதலைபடுவது உண்மையான மாற்றமாகும். அது யூ.என்.பி.ஏ இரண்டு முதலாளித்துவ சமூக, பொருளாதார, முறையை முற்றாக நிராகரிக்கின்றதும், அவைகளுக்கு நேர் விரோதமான சமூக அபிவிருத்திப் பாதையில் செல்லும் வழியேயன்றி, போலி 'தேசிய பொருளாதாரம்' போன்ற அரசியலற்ற வசனங்களை உமிழ்வோர் அல்ல. ஏற்பட்டுள்ள அழிவிலிருந்து மீள்வதற்கு தேவைப்படுவதெல்லாம் ஓர் அழிவுக்குப் பதில் இன்னும் பல அழிவுகளை ஏற்படுத்துவோரல்ல. எனவே, இன்று ஏற்பட்டுள்ள நிலைமைகளைப் புரிந்துகொண்டு உண்மையான மாற்றத்தை மக்கள் தேர்ந்தெடுப்பார்களானால், இன்று ஏற்பட்டிருக்கின்ற பன்முக அழிவுகள் தொடர்பாக கவலைப்படவேண்டிய தேவையில்லை.

...நாயகவின் கும்பல் தாங்கள் ...ளை ஐக்கிய தேசியக் கட்சி ...ு நோக்கி இழுத்துக் ...தற்கு பாரிய முயற்சியில் ...ள்ளனர். இந்த இரண்டு ...களின் இரு துருவங்களும் ...ான முறையில் ...டைவதால் எதிர்காலத்தில் ...ாது நிலை

---

...ன்ற சாதி வேற்றுமை என்றும், ...் பிரச்சினையென்றும் பணம் ...கல் வாங்கல் பிரச்சினையென்றும் ...லைச் சம்பவம் தொடர்பாக ரஞ்சித் ...டதற்கு சமமான ...ளையே அனைவரும் ...ார். இச்சம்பவம் தொடர்பாக ...கருத்து வெளியிட்ட ...த்தையில் வசிக்கும்



...மதி தாயொடுவா. ...ம்பவம் தொடர்பாக சில ...ள் வேவல்வத்தையில் வாழும் ...க்கள் அனைவரும் இனவாத ...ரர்கள் என்று விபரித்திருந்தன. ...ாகவே எங்களுக்கு சரியான ...ை. இங்கே அவ்வாறான தமிழ் ...ரச்சினை இல்லை. அசித என்ற ...எல்லோரதும் மதிப்பைப் ...வர். சிங்கள, தமிழ் எல்லாமே. ...ுண்டு துண்டுகளாக வெட்டி ...டிருந்ததைப் பார்த்தவர்களின் ...ினால் இது நடந்தது. 9ம் ...ு 8.30 மணியளவில் எங்கள் ...லைட்டை அணைக்கும்படி ...ள். அதன் பின்பே வீடுகள் ...ட்டன. பந்து மாத்திரம் ...ப்பட்டிருந்தால் இவ் வாறு ...து. அசித பிரதேசத்தில் மிகவும் ...பை பெற்றிருந்தவர். அவரின் ...ர் இவ்வாறு நடந்தது. முக்கிய ...கூறுவதென்றால் இச்சம்பவம் ...ரிக்கது) உண்மையை ...சொல்வதென்றால் பொலிசும்,

ராணுவமும் இருக்கும்போதுதான். நான் இதை பொலிசில் வந்து கூறுவதற்கும் தயார்"

வேவல்வத்தையில் ஆரம்பித்த இத்தீவைப்பு படலம் படர்ந்து பலகெடுன்னதோட்டம், திக்முகலானை, வேவல்வத்தை தோட்டம், எக்ஸ்லோண்ட் தோட்டம், பான்கெடை தோட்டம், கலபடதோட்டம் உட்பட பேலாங்கொடை வரை வியாபித்திருந்தது. வேவல்வத்தை தோட்டத்தில் சிங்கள, தமிழ்

மக்களிடையே எல்லா சமூகங்களிலும் மக்களிலே ஏற்படுவதுபோல் தனிப்பட்ட ஆத்திரமூட்டும் சம்பவங்கள் கடந்த காலம் முதல் நிலவி வந்துள்ளது. ஆனால் இந்த கோபம் நூற்றுக்கணக்கான வீடுகளை தீயிட்டு கொளுத்தும் அளவுக்கோ இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுகளின் தமிழ் மக்களை அகதிகளாக்கப்படவில்லை. இச்சம்பவம் இவ்வாறு பரவுவதற்கான காரணத்தை நாம் தேடப்பார்த்தோம். அப்போது எமக்குக் கிடைத்த தகவல்கள் வேலவத்தை தீவைப்பு சம்பவமும், அதன் பிறகு மற்றைய தோட்டங்களுக்கும் பரவுவதற்கான காரணமாக அப்பிரதேச அரசியல்வாதிகளின் குறுகிய இனவாத தூண்டலே காரணமென கீழ்க்காணும் சம்பவங்கள் சாட்சி பகிர்ந்தன.

(1)பவித்திரா வன்னியாரச்சி கொலை நடந்த இடத்துக்குச்சென்று தமிழ் மக்களை அச்சுறுத்தி அப்போது கலவரத்துக்கு சம்பந்தப்பட்ட சிங்களவர்கள் சிலரை கைது செய்தமையைக் கண்டித்து பேசியது.

(2)அசித பந்து இருவரின் மரணவீட்டுக்குச் சென்று முற்றாக இனவாதத்தை தூண்டுபடியாக (இதுபற்றி அப்பிரதேச ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அங்கத்தவர்கள் கூட வெறுப்பைக் காட்டினர்)' கரகோஷம் எழுப்பும்படியான சொற்பொழிவை ஆற்றியது.

(3)குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றி விசாரிப்பதற்காக கடந்த 19ம் திகதி கூடிய மாவட்ட இணைப்பதிகாரிகள் கூட்டத்தில் இரத்தினபுர பிரதேசசபையின் தலைவர் பந்து கரவிட்ட (பொதுசன ஐக்கிய முன்னணி) ' எமது ஆட்கள் இருவருக்கும் நஷ்ட ஈடு எங்கே' என்று கேட்டு சிங்கள இனவாதத்தைத் தூண்டும்படியாக நடந்துகொண்டதைக் காண முடியும்.

(4)தமிழ் இனவாதத்தைத் தூண்டுவதற்காக சம்பவம் நடந்து சில நாட்களில் அங்கு சென்ற அமைச்சர் தொண்டமான் கூறியதாவது ' ஏன் நீங்கள் அவர்களை அடித்து அவர்களின் வீடுகளை நெருப்பு வைக்கவில்லை' என்றும். ஆனால் தமிழ் மக்களின் கையால் அவ்வாறானதோர் அழிவை ஏற்படுத்தித் தமது வயிற்றுப் பிழைப்பு அரசியல் வேலைத்திட்டத்தை வெற்றி பெறச் செய்வதற்குத் தொண்டமானால் முடியவில்லை.

இந்த நான்கு சம்பவங்கள் ஊடாக எமக்கு தெரியவருவது என்ன? அப்பிரதேசத்தில் சிங்கள, தமிழ், பொ.ஐ.மு - ஐ.தே.க அரசியல்வாதிகள் தனிப்பட்ட சண்டையாக இருந்த இச்சம்பவத்தை வளர்த்து தமது அரசியலை முன்னெடுப்பதற்காக செய்த பாதகச் செயல் என்பது தெளிவுபடுகிறது.

இப்போது இந்த சம்பவத்திற்கு ஒரு மாதம் பூர்த்தியாகிவிட்டது. ஆனால், இவ் அழிவுகளுக்கு முகம் கொடுத்த பாதிக்கப்பட்ட இரண்டு பிரதேச பிரிவுகளுக்கு 400 தமிழ் குடும்பங்களுக்கு வழங்கப்படவேண்டிய மானியங்கள் இன்னும் சரியாக கிடைக்கவில்லை. வீடுகள் முற்றாக எரித்து நாசமாகப்பட்டதினால் தமிழ் மக்களுக்குரிய அரசி புத்தகம், வீட்டு உறுதிபத்திரம் மற்றும் பாடசாலை பிள்ளைகளின் பாடப் புத்தகங்கள் அனைத்தும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. இதனால், வாழ்வதற்கு எதுவிதமான பாதுகாப்பற்ற மழையினால் நனைந்து குளிரில் நடுங்கி நோய்கள் பீடிக்கும் நிலையில் மூன்றுவாரங்களாக போதிய ஒருவேளை உணவுகூட இன்றி வாழ்கிறார். (ஏற்பட்டிருக்கும் அழிவுகள் மேலே தரவுகளில் காணப்படுகிறது)

| பிரதேசம் | தோட்டக் கம்பனியும் தோட்டமும் | தீவைப்பால் அழிந்த லயக் காம்பிராக்கள் | தீவைப்பால் அழந்த லயன்கள் அல்லாத வீடு | தோட்டத்திற்கு சொந்தமில்லாத பிரிவில் அழிந்த வீடுகள் | முற்றாக அழிந்துபோன கடைகளின் எண்ணிக்கை | முற்றாக அழிந்துபோன கடைகளின் எண்ணிக்கை | கதவு, யன்னல் உடைந்த லயக் காம்பிராக்கள் | அகதிகளான குடும்பங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1.பக்பொட்டுவ | ஹ.தோ.க வேவல்வத்தை தோட்டம் | 155 | 58 | 02 | 15 | --- | 10 | 234 |
| 2.கலபட | ஹ.தோ.க திக்முகலான | 30 | 02 | --- | 02 | --- | 03 | 33 |
| 3 அதே | பேன்கொஸ் தோட்டக்கம்பனி எக்ஸ் லேண்ட் தோட்டம் | 55 | 06 | --- | 04 | --- | --- | 60 |
| 4 அதே | ஹ.தோ. க. பலகொடுன்ன தோட்டம் | 10 | --- | --- | --- | --- | 03 | 10 |
| 5 அதே | ஹ.தோ.க வெல்லவல தோட்டம் | 23 | 02 | --- | --- | --- | 41 | 63 |
| 6 கலபட | ஹ.தோ.ககலபட தோட்டம் | --- | --- | --- | --- | --- | --- | 01 |
| 3.பலங்கொடை | ஹ.தோ.க பலங் கொடை தோட்டம் | 19 | 01 | --- | --- | 14 | --- | 06 |
| | | 292 | 69 | 02 | 21 | 14 | 57 | 407 |

ஹ.தோ.க:-ஹபுகஸ்தென்ன தோட்ட கம்பனி. - உண்மை தரவுகள் (இரத்தினபுரி பிரதேச செயலாலர் பிரிவு)

கடந்த 19ம் திகதி அரச நிர்வாக உள்ளூராட்சி சேவைகள் அமைச்சர் ரத்னசிறி விக்கிரம நாயக்காவும் அப்பிரதேச அனைத்து அரசியல்வாதிகளும் பிரதேச செயலாளர், தோட்ட அதிகாரிகள் மற்றும் இ.தொ.க தொழிற்சங்க பிரதிகளும் சமுகமளித்து நடைபெற்ற மாவட்ட இணைப்பதிகாரிகளின் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் 20 நாட்கள் கடந்தும் செயல்பட்டிருக்கவில்லை. இந்த அழிவுகளால் 300 சிறு குழந்தைகள் உட்பட 2000 த்திற்கும் அதிகமாக தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் மானியங்கள்.

1. 3 நாட்களுக்கு போதுமான உணவுவகைகள் 7ம் பக்கம் பார்க்க....
2. 2 வாரத்திற்கு போதுமான உலர் உணவு கூப்பன் மேல்கண்ட கூட்டத்தில்

7ம் பக்கம் பார்க்க...

www.padippakam.com



# நெருக்கடியின் முன்னால் முற்போக்குவாதிகளின் கடமை



இலங்கை அரசியல் விழிப்படைந்து கொண்டிருக்கிறது.தனிநபர் தன்மை முதல் பொதுத் தன்மை வரை அரச எதிர்ப்பு எழுந்தவண்ணமுள்ளது. ஆனால் அவை அனைத்தும் பிறந்த மறுகணம் செத்து மடிகிறது. அப்படி இல்லையெனில் நீண்ட நாள் கடும் வேதனைக்கு முகம் கொடுத்து தோல்வியடைகிறது. இத்தோல்வியின் முன்னால் தனிநபர்கள் அரசியலை விட்டோடும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு நடப்பது ஏன்?....

அரசியல் எழுச்சி மிகவும் வரவேற்கத்தக்க ஒன்று. அவ்வரவேற்பு அரசியல் எழுச்சி அடைவதன் மூலம் மாத்திரம் பயனளிக்கக்கூடிய ஒன்றல்ல. பிரார்த்தனைகளின் மூலம் விழிப்படையும் அரசியல் எம்மை கனவுலகில் குறிக்கோளற்றவர்களாக கைவிடப்படும். எமது பிரார்த்தனைகளை வாக்குறுதிகளாக மீண்டும் எமக்கே விற்று லாபமாக தேர்தலில் வெற்றியடைவர். இதன் மூலம் வெற்றியடைவோர் ஆட்சி பீடம் ஏறுகின்றனர். நாம் தொடர்ந்தும் ஏமாற்றப்படுகிறோம்.

எனவே இப்போது தேவைப்படுவது பிரார்த்தனைகள் யதார்த்தமாகும். குறிக்கோள்கள் நல்லமுறையில் செயற்படக்கூடிய சரியான தெளிவான மார்க்கமாகும். நாளையும் நாம் ஏமாறாமல் இருப்பதென்றால் நிலையான வெற்றியின் மார்க்கத்தை கண்டுபிடிக்க வேண்டும். இல்லையெனில் இலங்கை அரசியல் நீண்டநாள் ஏமாற்றத்தில் சிக்குவது தவிர்க்க முடியாது. அதனால் செய்ய வேண்டியவைகளை புரிந்துகொள்வதற்கு கடந்தகாலத்தையும் நிகழ்காலத்தையும் ஒப்பிட்டு நோக்குவோம். அதிலிருந்து நாளை செய்ய வேண்டியவைக்கான பாடத்தை கற்றுக்கொள்வோம்.

## முதலாளித்துவ அரசாங்சகளின் தேன்நிலவு

நாட்டில் இது நாள் வரை இருந்த எல்லா அரசாங்ககளுக்கும் தேன்நிலவு காலம் இருந்தது. ஆட்சிபீடமேறியவுடன் எல்லா அரசாங்கமும் முற்போக்குவாதிகள், மக்கள் சார்பானவர்கள், ஜனநாயகவாதிகள். அதனால் மக்கள் இந்த முற்போக்கான எமது அரசாங்கத்தை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்படுகின்றனர். ,இதனால், அரசாங்கத்திற்கும் மக்களுக்குமிடையே எதுவித போராட்டமும் இல்லை. தேன் நிலவு காலத்தின் தன்மை இதுவே.

70-77 காலத்தில் முக்கூட்டு அரசாங்கம் (ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, சமசமாஜ கம்யூனிஸ்ட்) மக்களுக்கு கசந்து போகும்போது ஐக்கிய தேசியக் கட்சி மக்கள் துன்பத்தில் இரக்கம் கொண்டு இறங்கி வந்தனர். சிறிமா உட்பட முக்கூட்டின் ஒடுக்குமுறையின் (ஏழு வருடசாபம்) சுமையை தாங்கிக்கொள்ள முடியாத மக்களின் கண்ணீர் ஜே.ஆர் உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் வாக்குறுதியாக மாறியது. எட்டு இறாத்தல் தானியும் தரும் உறுதிமொழி முதல் தார்மீக சமுதாயம் வரை வாக்குறுதிகள் நீண்டது. இதை நம்பிய மக்கள் தமது கை, கால்களை வீசி 5:6 அதிகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்கினர். ஆட்சி பீடமேறிய உடன் தார்மீக சமுதாயத்திற்கு அணிநடையாக தலதா மாளிகையை மேடையாக மாற்றினர். மக்களுக்கு உறையாற்றிய பிரேமதாஸ கண்டி வாவியை சுற்றி வலம் வந்து மக்களோடு ஆனந்தக் களியாட்டத்தில் திளைத்தனர். (இவைகள் அரச ஊடகங்கள் மூலம் நாம் கேட்டவை) எண்ணெயை மீதமாக்கி பிரமதாஸ மாட்டு வண்டிகளில் பயணம் செய்தனர். ஜே.ஆர். விவசாயிகளோடு சிரித்து விளையாடி உழவர் வைபவத்தை மாபெரும் விழாவாக்கினார். பொருளாதாரத்தை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு தாரைவார்த்து ஈஸ்மன்ட் கலராக்கினார்.

17 வருட கால ஐக்கிய தேசியக் கட்சியின் சாபத்திற்கு பின்பு உத்தியோகபூர்வ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை எழுப்பிவிட்டனர். போலியாக தூக்கத்திலிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரமதாஸாவின் மரணத்தின் பின் அக்கம் பக்கம் பார்த்தனர். (உண்மையான எதிர்க்கட்சியான மக்கள் விடுதலை முன்னணி அப்போது முற்றாக சங்காரம் செய்யப்பட்டிருந்தது.) மக்கள் சக்திகள் அனைத்தையும் ஏமாற்றுவதற்காக ஸ்ரீலங்கா சுதந்தரக் கட்சி பொதுசன ஐக்கிய முன்னணியை உருவாக்கியது. 17 வருட பேயாட்சியின் பின் ஒடுக்குமுறை, மக்களின் கண்ணீர், இரத்தம் இவைகளை உறுதிமொழியாக மாற்றி மேடையேற்றினர். மக்களது பிரார்த்தனைகள் எதிர்பார்ப்புகள் அனைத்தும் தேர்தல் வாக்குறுதிகளாக தேர்தல் விஞ்ஞாபனத்தினுள் குறித்து அடக்கப்படுகிறது. மக்கள் இவர்களையும் ஆட்சிபீடத்தில் அமர்த்தினர். அத்தோடு பொதுசன ஐக்கிய முன்னணியின் தேன்நிலவு சமயம் ஆரம்பமாகிறது. ஐக்கிய தேசியக் கட்சி பேயாட்சி காலத்தில் பறிக்கப்பட்ட பத்திரிகையாளர்களின் சுதந்திரம் மீண்டும் கிடைத்தது. ஐக்கிய தேசியக் கட்சி காலத்தில் ஒடுக்கிவைக்கப்பட்ட கலைஞர்கள் , புத்திஜீவிகளுக்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது. பொருட்களின் விலைகள் குறைகின்றது. ( பாணின் விலை 3.50 ஆகிறது.) உரமானியம் கிடைக்கிறது. டீசலின் விலை ஒரு ரூபாவால் குறைக்கப்படுகின்றது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் கேட்கக் கிடைக்கிறது. ஆனால், அது சுமார் நான்கு மாதங்களுக்கு மாத்திரமே. அதாவது ஜனாதிபதி தேர்தல் வரையில்.

## தேன்நிலவு முடிகிறது.

குறுகிய கால தேன்நிலவு காலம் முடிவுற்று (இருந்த எல்லா முதலாளித்துவ அரசாங்கத்திலும்) துர்ப்பாக்கிய நிலமை தோன்றுவது கட்டாயமாக்கப்பட்டது. அப்போது தான் நாம் ஏமாற்றப்பட்டுவிட்டோம். எண்ணம் தோன்றுகின்றது.

77ல் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் இளம் பருவ காலத்தில் முற்போக்குவாதிகளான ஜே.ஆர், பிரேமதாச, ரணில் விக்கிரமசிங்க போன்றோர் மக்கள் துரோகிகளாக மாறுவதற்கு நீண்ட நாள் செல்லவில்லை. எட்டு இறாத்தல் தானியம் எப்படியானாலும் ஏழைகளின் கூப்பன் புத்தகம் பறிக்கப்படுகின்றது. உலக வங்கி கட்டளையின் படி மக்களுக்குரிய மானியம் வெட்டப்படுகின்றது. நாட்டு மக்களுக்கு சொந்தமான வளங்கள் பல்தேசியக் கம்பனிகளுக்கு நிபந்தனையின்றி விற்கப்படுகின்றது. சுதந்திர வர்த்தக வலயத்தில் எமது நாட்டின் உழைப்பு குறைந்த கூலியில் சுரண்டப்படுகின்றது. மத்திய கிழக்கு அடிமை சேவைக்கு எமது நாட்டு உயிர்கள் விற்கப்படுகின்றது. வேலையில்லாப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. உரிமைகளைக் கேட்டுப் போராடிய தொழிலாளர்கள் தொழிலிலிருந்து நீக்கப்படுகின்றனர்.(வேலை நீக்கம் செய்யப்பட்ட 80 ஜூலை ஊழியர்களின் பிரச்சினை இன்றும் அப்படியே.) இவைகள் பற்றிப் பேசிய பத்திரிகையாளர்கள், புத்திஜீவிகள் முற்போக்குவாதிகள் குண்டர்களால் தாக்கப்பட்டனர். இறுதியில் தேர்தல் வரைப்படத்தை அகற்றுவதாகக் கூறி தேர்தல் உரிமை பறிக்கப்படுகின்றது. அரசியல் கட்சிகளை தடைசெய்து கடைசியாக நாட்டை சுடுகாடாய் மாற்றினர். (இவைகள் அனைத்தின் பின்னால் ரணில் விக்கிரமசிங்க இருந்தார் என்பதை நினைவில் வைத்துக்கொண்டால். எதிர்காலத்தில் பிரயோசனப்படும்)

17 வருட பேயின் சாபத்திற்கு எதிராக மக்களின் அரசாங்கமென்று அமைந்த பொதுசன முன்னணி இப்போது என்ன செய்துகொண்டிருக்கின்றது? இப்போது 3.50 க்கு பாண் கிடையாது. மானியங்கள் அனைத்தும் வெட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றது. நாட்டு பொருளாதாரம் பாதாளத்தை நோக்கி சென்றுகொண்டிருப்பது மானியம், ஓய்வூதியம் வழங்கபபடுவதால் தான் என்று புதியதோர் சித்தாந்தம் உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டு பெறுமதிமிக்க வளங்கள் எல்லாம் ஐக்கிய தேசியக் கட்சி காலத்தில் போலவே இப்போதும் விற்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஜே.ஆர். ஐக்கிய தேசியக் கட்சியால் உருவாக்கப்பட்டதும் சந்திரிகா உட்பட பொதுசன ஐக்கிய முன்னணியினால் நீக்குவதாக கூறிய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை இன்னும் நீக்கப்படவில்லை. அவ்வதிகாரத்தைப் பயன்படுத்தி அவசரகாலச்சட்டம் போன்ற அடக்குமுறைச் சட்டங்களை பயன்படுத்தி உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டிய தேர்தல் பின்போடப்படுகிறது. தேர்தலில் வெல்வதற்காக குண்டர்கள் பயன்படுத்தப்படுகிறது. எதிர்கட்சிகளுக்கு எதிராக காடைத்தனங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. தொழிற்சங்க போராட்டம் ஒடுக்கப்படுகின்றது. சுருக்கமாக கூறுவதென்றால் ஐக்கிய தேசியக் கட்சி செய்தவை அனைத்தையும் விட மிக நல்ல முறையில் செய்யப்படுகின்றது. இன்னும் குறைவாக இருப்பது 80-90 காலப்பகுதியில் நடந்த ஒடுக்குமுறை மாத்திரம் தான் என்று பொதுசன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் கூறுகின்றார்கள். ஆனால் அந்த கொடுமை ஒரு சில இடங்களில் எரிமலையாக வெடித்துக் கொண்டிருக்கின்றது. ஊடக சுதந்திரம் ஊடகவியலாளர்களை பின்தொடர்ந்து கடித்து குதறுகின்றது. கடைசியாக பச்சை நிற ஐக்கிய தேசியக் கட்சியும் நீல நிற ஐக்கிய தேசியக் கட்சியால் வேறுபடுவது நிறத்தில் மாத்திரமே என்று தெளிவுபட்டுக்கொண்டிருக்கின்றது.

இந்த இரு கட்சிகளும் மக்களுக்கு பொய் வாக்குறுதிகளை அளித்து மக்களை ஏமாற்றி ஆட்சிபீடமேறினர். இதுநாள் வரை எமது நாட்டு தேர்தல் அரசியல் சரித்திரத்தில் நடைபெற்றது இதுவே. ஆட்சிபீடமேறியவுடன் தாம் ஊழியம் புரியும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் தமது வர்க்கத்திற்கும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றது. (தனியார் மயம், நாட்டை துண்டாடும் யாப்பு, மானியம் வெட்டு போன்றவற்றை சிந்தித்துப் பாருங்கள்) மக்களுக்கு வாக்களித்து ஆட்சிபிடமேறிய ஆட்சியாளர்கள் நிறைவேற்றுவதோ தமது வர்க்கத்தினருக்கேயாகும். இவர்களால் உண்மையாக மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இவர்களுக்கு உண்மையான தேவையில்லை. அது மக்களின் பிரச்சினையேயன்றி இவர்களது பிரச்சினை அல்ல. அதனால் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கும் தேவை இவர்களிடமில்லை. மறந்தும் கூட மக்களது பிரச்சினைகளை தீர்க்கும் தேவை இவர்களுக்கு ஏற்பட்டாலும் கூட ஏகாதிபத்தியவாதிகள் உள்ளிட முதலாளித்துவ வர்க்கம் அதை செய்தவற்கான சந்தர்ப்பத்தை வழங்க மாட்டார்கள்.



**மக்கள் துன்பப்படுவதை எண்ணி நாம் கண்ணீர் விடுவதால் பலன் ஏதுவுமில்லை. நாடு சீரழிவதாக குறை கூறிக்கொண்டிருப்பதால் பிரயோசனமில்லை. இலங்கை மக்களை பாதாளத்தில் தள்ளப்பட்டதை நினைத்து கோபப்படுவதால் எதுவித பயனுமில்லை. உணர்ச்சிகளின் அடிப்படையில் அரசியலை தேர்ந்தெடுப்பதினால் ஏமாற்றம் மாத்திரமே எமக்கு மிகுதியாகும். இரவு விழுந்து குழியில் நாம் ஒருமுறையல்ல பல முறை விழுந்துள்ளோம். மக்கள் இங்கு அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். நிலம் (பச்சை) எதிர்க்கட்சி மக்களுக்காக முதலை கண்ணீர் துடிக்கிறது. விடை மீண்டும் வேண்டாம் என்று உதைத்துத் தள்ளிய ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் ஆட்சிபீடமேற்றுவதா? மீண்டும் அவர்கள் எம்மை ஏமாற்றமாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதம் என்ன? முதலாளித்துவ கட்சிகளின் தன்மை மக்களை ஏமாற்றி ஆட்சிபீடமேறி மக்களை ஒடுக்குமுறைக்குள்ளாக்குவதே அவர்களின் குறிக்கோளாகும்.**

படிப்பகம்

## தலமையை அல்லது நிறத்தை மாற்றினாலும்

ஒவ்வொரு நாளும் நாம் நீல நிற அரசாங்கத்தையோ நீலம் சிகப்பு அரசாங்கத்தையோ, அல்லது பச்சை நிற அரசாங்கத்தை நிறுவியிருக்கின்றோம். மாற்றம் ஏற்பட்டதா? இல்லை. நிறத்தை மாற்றினாலும் கட்சியை மாற்றினாலும் தலமையை மாற்றினாலும் நாட்டில் ஓர் மாற்றம் ஏற்படவில்லை. வர வர பிரச்சினைகள் உக்கிரமடைந்துள்ளது. நாடு பாதாளத்தில் தள்ளப்பட்டிருக்கின்றது. நிகத்தால் உடைக்க வேண்டிய பிரச்சினை மின்சார வாளால் வெட்டியும் கூட அகற்ற முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது. அப்படியானால் நிறமோ கட்சியோ தலைமையோ இவர்கள் எல்லோரினாலும் கொண்டு செல்லப்படும் ஆட்சி முறையை மாற்றியமைக்க வேண்டும் . முதலாளித்துவ அல்லது ஏகாதிபத்தியவாதிகளின் தேவைகளை

7ம் பக்கம் பார்க்க.....

www.padippakam.com



தற்கால நெருக்கடியின் முன்னால்
6ம் பக்கத்தொடர்........

பிரதிநிதித்துவம் செய்யாத ஆட்சி அதிகாரத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும். அவ்விடத்திலிருந்தே நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். புதிய மாற்றத்திற்காக நாம் தயாராக வேண்டும்.

## மக்கள் தொடர்ந்தும் ஏமாறுவது ஏன்

ஓர் அரசாங்கத்தின் தேன்நிலவு முடிவுறும்போது சந்தர்ப்பவாத ஊடகங்களும் மக்கள் வாதிகள் எனக் கூறும் பல அமைப்புகளும் தங்களது அணியை மாற்றுகின்றனர். பச்சை நிறம் நீல நிறமாகின்றது. நீல நிறம் பச்சையாகின்றது. முன்பு பச்சை நிறத்தை தோற்கடித்து நீலம சிகப்பு நிறத்தை வெற்றிபெறச் செய்வதற்காக ஊடகங்களைப் பயன்படுத்தி மேடைகளில் பேசிய நபர்கள் தமது அணியை மாற்றி பச்சை நிறத்தை வெற்றி பெறச் செய்வதற்காக கங்கணம் கட்டியுள்ளனர். மக்களின் மனநிலையை வஞ்சித்து ஏமாற்றியுள்ள கட்சிக்கு பதிலாக மாற்று நிற முதலாளித்துவ கட்சியொன்றை ஆட்சிபீடத்திற்கு கொணர்வதற்கு முயற்சிக்கின்றனர். சுருக்கமாக கூறினால் மக்களை மீண்டும் ஏமாற்றுகின்றனர். சென்றமுறை ஜனநாயகத்தை பறித்த மக்கள் துரோகனிடம் ஜனநாயகத்தையும உயிர் வாழும் உரிமைகளையும் கோருகின்றனர். நாட்டை அழிவின் முகட்டுக்கே கொண்டு சென்றதினால் நிராகரித்துத் தள்ளிய அவர்களை மீண்டும் ஆட்சிபீடமேற்றுவதற்காக மக்களை ஏமாற்றுகின்றனர்.

## முற்போக்குவாதிகளினதும் புத்திஜீவிகளினதும் இன்றைய பணி?

மக்கள் துன்பப்படுவதை எண்ணி நாம் கண்ணீர் விடுவதால் பலன் ஏதுவுமில்லை. நாடு சீரழிவதாக குறை கூறிக்கொண்டிருப்பதால் பிரயோசனமில்லை. இலங்கை மக்களை பாதாளத்தில் தள்ளப்பட்டதை நினைத்து கோபப்படுவதால் ஏதுவித பயனுமில்லை. உணர்ச்சிகளின் அடிப்படையில் அரசியலை தேர்ந்தெடுப்பதினால் ஏமாற்றம் மாத்திரமே எமக்கு மிகுதியாகும். இரவு விழுந்து குழியில் நாம் ஒருமுறையல்ல பல முறை விழுந்துள்ளோம். மக்கள் இங்கு அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். நீலம் (பச்சை) எதிர்க்கட்சி மக்களுக்காக முதலை கண்ணீர் துடிக்கிறது. விடை மீண்டும் வேண்டாம் என்று உதைத்துத் தள்ளிய ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் ஆட்சிபீடமேற்றுவதா? மீண்டும் அவர்கள் எம்மை ஏமாற்றமாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதம் என்ன? முதலாளித்துவ கட்சிகளின் தன்மை மக்களை ஏமாற்றி ஆட்ச்பீடமேறி மக்களை ஒடுக்குமுறைக்குள்ளாக்குவதே அவர்களின் குறிக்கோளாகும். நேற்றைய சந்ததியினர் இதைப் புரிந்துகொள்ளாததினால் இன்றைய சந்ததி ஒடுக்குமுறைக்குள்ளாகி உரிமையிழந்துள்ளனர். இன்றைய சந்ததி இதைப் புரிந்துகொள்ளா விட்டால் நாளைய சந்ததி இதைவிட பன்மடங்காகும். நாடு பிளவுபடும். ஜனநாயகம் உதிர்ந்துவிடும். உயிர் வாழும் உரிமை இல்லாதுபோகும். எனவே இதைப் புத்திஜீவிகள் முற்போக்குவாதிகள் நேர்மையான முறையில் புரிந்துகொள்ள வேண்டும். புரிந்து கொண்டு அதைத் தமது சகோதர மக்களுக்கு உணர்த்தி தெளிவடையச் செய்ய வேண்டும். இலங்கை மக்கள் மீண்டும் ஏமாந்து பாதாளத்தில் விழுவதைத் தடுக்க வேண்டும். சரியான பாதையில் செல்வதற்கு வழிகாட்ட வேண்டும்.

இனவாத விஷஜந்து....
5ம் பக்கத் தொடரச்சி.....

முடிவானவை

1. சமயலறைக்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்காக 2000 ரூபாவும்

2. வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்காக 9000 ரூபாவும்

பெற்றுக்கொடுப்பதற்கும் லயக் காம்பிராக்கள் (வீடுகள்) அனைத்தும் குறிப்பிட்ட தோட்டக் கம்பனிகள் மூலம் செய்து கொடுப்பதாக கூட்டத்தில் முடிவுகள் எடுத்திருந்த போதிலும் குறிப்பிட்ட தீர்மானங்கள் 3 வாரங்கள் கடந்தும் செயல்படுத்தமுடியவில்லை.

குறிப்பிட்ட கூட்டம் தொடர்பாகவும் இப்போது அங்கு நிலவும் நிலைமைகள் தொடர்பாகவும் நாம் பெல்மடுல்ல பிரதேச சபை உறுப்பினர் (ஜே.வி.பி) தோழர் அசல ஜாகொட அவர்கள் ' நடைபெற்ற கூட்டம் வெறும் கேலிக்கூத்தாகவும் சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் சார்பில் எந்தவொரு பிரதிநிதியும் அழைக்கப்பட்டிருக்கவில்லையென்றும் அழைக்கப்பட்டிருந்த தொழிற்சங்க பிரதிநிதிகள் அனைவரும் பயந்ததினால் கூட்டம் நடைபெற்ற மண்டபத்திற்கு வெளியே நின்றதாகவும் அவர்களது கருத்தை வெளியிடுவதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொடுப்பதற்காக தான் தலையிட்டதாகவும் கூறினார். மேலும், தோழர் ஜாகொட கூறியதாவது இவ்வாறான நிலைமை எதிர்காலத்திலும் தோன்றாதிருக்க நீண்ட கால வேலைத்திட்டம் வேண்டுமொன்று தேவையென நான் கேட்டபோது முதலில் அதை ஏற்றுக்கொண்டு பின்பு, அதற்கான நேரம் இப்போது இல்லை என்று கூறி கூட்டத்தை முடித்தனர்.

அன்றைய தினம் அரசாங்கத்தினால் திட்டமிடப்பட்ட மானியம் வழங்கும் திட்டம் எதுவும் சரிவர நடைபெறாததினால் இரத்தினபுரி மாவட்டம் முழுவதிலுள்ள எமது கட்சி அங்கத்தவர்கள் ஆதரவாளர்கள் அனைவரும் அணிதிரண்டு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக உதவிகளை செய்வதற்காக பொருட்கள் சேகரிப்பதாகவும் எதிர்காலத்தில் விசேடமாக வேவல்வத்தை பிரதேசத்தில் சிங்கள, தமிழ் இளைஞர்களிடையே நட்புறவை வளர்ப்பதற்கான பிரதேசத்தில் ஏனைய நலன்புரி சங்கங்களின் உதவியோடு கலாச்சார வேலைத்திட்டம் ஒன்றுக்கான ஏற்பாடுகளை செய்வதற்கு தாம் திட்டமிட்டிருப்பதாகவும் கூறினார்.

கடைசியாக இச்சம்பவங்களின் போது பாதுகாப்பு படையினர் செயல்பட்ட விதத்தை தேடிப்பார்த்த போது சம்பவம் நடந்து முடிந்தபின்பு வேவல்வத்தை பிரதேசத்தில் தற்காலிக காவல் நிலையமொன்று அமைக்கப்பட்டு அதில் 13 பொலிஸார் கடமைக்கு அமர்த்தியுள்ளனர். அதேவேளை, கொலைகளுக்கு சம்பந்தப்பட்டவரெனக் கூறி 14 பேர் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளர். அதேவேளை வீடுகளுக்கு தீவைத்து பாரிய அட்டகாசம் செய்தவர்களில் ஒருவரேனும் இதுவரை கைது செய்யப்படவில்லை. இது தொடர்பாக இரத்தினபுரி பொலிஸ் பிரதான அதிகாரி எஸ். சரத்குமார கூறியதாவது, தமிழ் மக்கள் நாளொன்றுக்கு 15-20 முறைப்பாடுகள் செய்வதாகவும் ஆனால் அவர்களில் ஒருவரேனும் தீவைப்புக்கு சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களை குறிப்பிடவில்லை. ஆம். நாம் அவரை பேட்டி கண்டபோது அவர் கூறியவை பற்றி சில பகுதி....

செஞ்சக்தி : வீடுகளுக்கு தீவைக்கும் போது தமிழ் மக்கள் எல்லோரும் தொழிற்சாலையில் இருந்ததாக நீங்களே கூறினீர்கள். அப்படியானால் அவர்களது வீடுகளை எரித்தது யாரென்று தெரிவதற்கான வழியில்லை தானே. குறைந்தபட்சம் இது தொடர்பாக இரகசிய பொலிசாரை பயன்படுத்தியாவது விசாரணை செய்ய மறுப்பது ஏன்?

அவர் : நாம் கூறினால் ஒருபோதும் ரகசிய பொலிசார் வரமாட்டார்கள். அன்று மாவட்ட குழு கூட்டத்தில் இதுபற்றிதோர் முடிவு எடுக்கப்பட்டது. அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை.

செஞ்சக்தி: மக்களை இவ்வாறான அழிவுகளை ஏற்படுத்தும் சம்பவத்திற்கு தூண்டிலிடாமல் மக்களாக முன்வரமாட்டார்கள். இதேபோன்று சம்பவங்கள் ஆனமுடுவ, கட்டான போன்ற பிரதேசங்கள் இருக்கின்றன. ஆனால், அவைகளுக்கு பின்னால் அரசியல்வாதிகள் இருப்பது உறுதியாகிவிட்ட செய்தி. இரத்தினபுரியிலும் 97 போல் இச்சம்பவத்தின் பின்னாலும் அரசியல்வாதிகள் இருக்கின்றார்கள் அல்லவா?

அவர் : இப்போது இல்லையென்றே தெரிகிறது. எதிர்காலத்தில் எப்படியென்று சொல்லமுடியாது.

செஞ்சக்தி: அப்படியானால் மக்கள் ஏன் இப்படி செயல்பட்டார்கள். பொலிஸ் தோட்டத்தில் இருக்கும் போதுதான் அவர்கள் கூட்டமான வந்து லைட்டை அணைக்கும்படி கூறிவிட்டே வீடுகளை நெருப்பு வைத்துள்ளனர். இரத்தினபுரி மக்களை பொலிஸாருக்கு கட்டுப்படுத்தமுடியாதுபோனதற்கான காரணம் என்ன?

அவர் : பொலிஸ் இருந்து இடத்திலிருந்து சற்று தூரத்தில் இருந்துதான் ஆட்கள் நெருப்பு வைத்துள்ளனர். எனவே, எமக்கு தெரியாது. தீ பற்றியதா? தீ வைக்கப்பட்டதா? என்று.

செஞ்சக்தி: ஆனால், மக்களுக்கு தெரியும் தானே. பொலிஸார் என்று ஒன்று இருப்பதாக உண்மையாகவே அவர்கள் மத்தியில் ஓர் நம்பிக்கை இருந்திருக்கும் எதுநடந்தாலும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கமாட்டார்கள் என்று?

அவர் : உண்மை எனக்கு புரிகிறது கேட்கும் கேள்விக்கு எனக்கு சரியான பதிலொன்றை தரமுடியாது. எப்படியாயினும் குறிப்பிடும் அளவுக்கு பொலிஸார் போதாது. இன்றும் கூட மாத்தளைக்கு 100 பொலிஸாரை அனுப்பும்படி 'ஓடர்' இருக்கிறது. உண்மையாகவே இப்படியே போகுமானால் இரத்தினபுரி பொலிசை மூடவேண்டியய நிலைதான் ஏற்படும்.

ஆயிரக்கணக்கான மக்களின் இருப்பிடங்களை இல்லாதொழித்த, இரண்டு இளம் உயிர்களை பழிகொண்ட இச்சம்பவம் தொடர்பாக அரசாங்கத்தில் இருக்கின்ற அரசியல்வாதிகள் கூடி குறைந்தபட்சம் எதையாவது செய்வதற்கு முன்வந்திருப்பது அரசாங்கத்திடமிருக்கும் மனிதாபிமான தன்மையினால் அல்ல. தோட்ட அதிகாரிகளால் தமது தோட்ட வளங்களை பாதுகாத்து தரும்படி அரசாங்கத்தை வற்புறுத்தியதனாலேயே. இது மேலும் உறுதிபடுவது தோட்டங்களில் உற்பத்திக்கு பாதிப்பைத்தரும். தீவைப்பும் போதும் தமிழ் மக்களை தாக்கப்படுவதை தடுப்பதற்காக பொலிஸ்காவல் நிலையமொன்றை அமைத்து அரசாங்கம் தமிழ் மக்களுக்கு தேவையான கொடுப்பனவுகளை கூட பெற்றுக்கொடுக்வோ.

கலவரங்களுக்கு காரணமானவர்களை கைது செய்வதற்காக எதுவிதமான நடவடிக்கை எடுக்காததன் மூலம் இது நிரூபிக்கப்படுகிறது. முதலாளித்துவ அரசாங்கம் மூலவளத்தை பாதுகாப்பதற்கவே தயாரிக்கவேண்டிருக்கின்றனர். மக்களது ஒடுக்குமுறையை விற்று சாப்பிடுவதற்காகவே இவர்கள் செயல்பட்டவண்ணமுள்ளனர் என்பது இச்சம்பவம் மேலும் உறுதிப்படுத்துகிறது.

கடைசியாக ஒன்றை குறிப்பிட்டாக வேண்டும். சில பொதுசன ஊடகங்கள் மூலம் இச்சம்பவத்தை முன்பதாகவே இனவாத வியாபாரத்திற்கு தேவையான முறையில் திரிக்கப்பட்டுள்ளது. அவர்களது அறிக்கைக்கு ஏற்ப இச்சம்பவம் தமிழ் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டதாகவும் தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டதாக கூறி விற்பனைக்கு இருந்த முறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஆனால், தமிழ் மக்கள் எம்மிடம் கூறியதாவது, இச்சம்பவ கோர்வையினுள் அவ்வாறான நிகழ்வுகள் ஒன்றுமே இல்லையென்றே. இக்குறிப்பை நாம் எழுதுவது மேற்படி சம்வத்தை நியாயப்படுத்துவதற்காக அல்ல. சம்பவத்தின் உண்மை நிலைமை இலங்கை வாழ் மக்கள் தெரிந்துகொள்ள்வேண்டியிருப்பதனாலேயே.

1ம்பக்கததொடர்.......
அமெரிக்காவில்........

தகவல்கள் தெரிவிக்கின்றன. 'உங்களது உயிருக்கு எம்மால் பாதிப்பில்லை' என்று பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட மூன்று எல்.ரீ.ரீ.ஈ இயக்க பிரதிநிதிகளும் ரணிலுக்கு உத்தரவாதம் அளித்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

எப்படியாயினும் , இங்கு நடைபெற்றுள்ள ரகசிய பேச்சுவார்த்தை பாரிய சூழ்ச்சி சதிகள் நிறைந்து மறைந்திருப்பதாகவும் அவைகளின் முதல் படியே இப்பேச்சுவார்த்தையென்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். இந்த இரண்டு முதலாளித்துவ கட்சிகளையும தமது தேவைக்கேற்ப பயன்படுத்தி சுற்றுவதன் மூலம் தமது நோக்கத்தை நிறைவுசெய்து கொள்வதே எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தின் தலையாய குறிக்கோளாக இருப்பதினால், இப்பேச்சுவார்த்தையும் அந் நோக்கத்திற்காகவே பயன்படுமென்றும் இது தவிர்க்க முடியாத ஒன்றெனவும் அவதானிகள் கருதுவதாக 'செஞ்சக்திக்கு' தெரியவருகிறது.

2ம் பக்கத் தொடர்......
இருளில் மூழ்கிக்கிடக்கும்.........

அனுபவத்தையே பெறுகின்றனர். தினக்குறிப்பு, பாடக்குறிப்பு, பரீட்சை தாள் திருத்தம் போன்றவற்றை சிறிய மண்ணெண்ணெய் விளக்கின் உதவியோடு ஒவ்வொரு ஆசிரியரும் மாறி மாறி இக்கடமையில் ஈடுபடுவதாக அப்பாடசாலை சிரேஷ்ட மாணவர்கள் தெரிவித்தனர்.

இதைப்பற்றி பாடசாலை அதிபர் வலபன கல்வி வலயக் காரியாலயத்திற்கு எழுத்து மூலமாகவும் வாய் மூலமாகவும் தெரிவித்து எதுவித பயனும் கிடைக்காததினால் கல்வி வலய அலுவலகத்தில் இதுதொடர்பாக வினவியபோது அவர்கள் 2500 செலுத்தவேண்டிய பணத்தை மின்சார திணைக்களத்துக்கு செலுத்தியுள்ளார்களாம். ஆனால் இன்றுவரை அப்பாடசாலைக்கு மீண்டும் மின்சாரம் பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

8ம பக்கத்தொடர்....
பலவன்தமாக பிரச்சாரத்தை......

77ஜயச்சிக்குறுய் நடவடிக்கையில் ஈடுபட்டு காயப்பட்டிருக்கும் ராணுவத்தினரை சந்தித்தும் ரத்வத்தையின் செல்வாக்கை குறைத்து அதை தனது கணக்கில் வைப்பிடவும், எனக்கு யுத்தபிரதேசத்திற்கு போய் ராணுவ வீரர்களை பார்ப்பதற்கு ஆவலாயிருந்தாலும் கூட அதன் தடையாக இருப்பது எனது பாதுகாப்பு பிரிவே என்று அனுராதபுரத்தில் வைத்து கூறி 'ரத்வத்தையின் கன்னத்தில் அரைந்துள்ளார்.

எப்படியாயினும் இன்னும் அரசாங்க ஊடகங்களுக்கு ஒருசில அமைச்சுகளுக்குரிய பிரச்சாரத்தை பெற்றுக்கொடுப்பதை தடுப்பதற்கான கட்டளை இடப்படாததால் எதிர்காலத்தில் இவ்வாறான முடிவுகள் எடுப்பது தவிர்க்கமுடியாததென அரச ஊடகங்களில் செயல்படுவோர் கருதுகின்றர்.

படிப்பகம்

www.padippakam.com


# செஞ்சக்தி

198–19 பஞ்சிகாவத்தை வீதி,கொழும்பு 10. 345694 ந – அயலை – தொலைஅறபு எடவட்டம

மக்கள் விடுதலை முன்னணியின் சர்வதேச தலைமைபீடத்தின் முகவரியும் தொலைமடல் இலக்கமும்



☆ ARUNODAYA, B.P. 485, 75528 PARIS, CEDEX 11,FRANCE,
FAX: 0033 1 40330414

☆ P.O. BOX 194, CARNEGIE, VICTORIA 3163, AUSTRALIA,
FAX: 0061 3 94369312

☆ E-MAIL-JVP @ i bekkoame.or.jp


## வரவு — செலவும் மனித உயிர்களும்

மீண்டும் (வரவு–செலவு) செப்படி வித்தைக்கான கணக்குகள் வானத்தில் கரனமடிப்பதற்கு ஆரம்பமாகிக்கொண்டிருக்கின்றது. சீரான அபிவிருத்திகளைப் பற்றிய கனவுகளை விதைக்கும் போலியான வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அதே வாயினால் வெளிவந்துகொண்டிருக்கின்றது. ஐயோ....! இந்த துரதிஷ்டமான யுத்தம் மாத்திரம் இல்லாமலிருந்தால், எமது நாடு எப்படியான சொர்க்க ராஜ்ஜியமாக இருக்குமென்று யுத்தத்தைக் கொண்டு செல்வோரின் வாயினால் வெளிவருகின்றது. யுத்தம் தொடர்பான கணக்குகளின் ஊடே, பொருளாதாரத்தின் மீது உடைந்து விழும் அனைத்து காரணிகளையும் நியாயப்படுத்தும் காரணியாக அமைந்துள்ளது. இவ்வாறான பல கட்டடங்கள் மீண்டும் புனர்நிர்மாணம் செய்வதற்காக இப்போது பழைய தட்டுகளின் கழிவை அடைத்து சுத்தம செய்து புதுப்பித்துக்கொண்டிருக்கின்றனர். எனவே இதனது இன்னுமோர் வரவு–செலவு அறிக்கைக்கான முன்வரும பொருளாதார வசந்தகாலமாகும்.

கிழக்காசியாவில் ஆரம்பமான முதலாளித்துவ பொருளாதார உடைவு (வீழ்ச்சி) இப்போது ஜப்பான் ஊடாக ஐரோப்பாவரை படர்ந்து விரிந்துள்ளது. பொருளாதார உடைவு எனும் பேய் போகும்போது எல்லா முடமானவற்றையும் காலிசெய்துகொண்டு போகும் என்பது நல்லமுறையில் தெளிவுபடுத்தியது. இந்தோனேசியாவில் சுகர்த்தோவின் வீழ்ச்சியாகும். இப்போது மலேசியாவிலும் அரசியல் என்ற 'முடம்' பொருளாதாரம் என்ற பேயினால் உடைத்து நொருக்கியுள்ளது. முதலாளித்துவத்தின் கீழ் அனைத்து சமூக வாழ்க்கை துகள்களாக மாற்றிய சோசலிசத்திலும் யெய்ச்டின் எதிர்ப்பு லட்சக்கணக்கான மக்கள் ஊர்வலத்தின் மூலம் இன்று வீதிகள் அலங்கரிக்கப்படுகின்றன. ஜேர்மனியில் முதலாளித்துவ கொடியை கீழ்நோக்கிவிட்டு சோஷலிசத்திற்கான தேவை பல குறைபாடுகளுடன் உதயமாகிக்கொண்டிருக்கின்றது. இவ்வாறான உலக கிளர்ச்சியான நிலைமைகளைப்பற்றி எதுவித அக்கறையுமற்ற இலங்கை முதலாளித்துவ வர்க்க தலைவர்கள் வழமையான தமது செப்படிவித்தை கணக்குகளுக்கு தயாராகிக்கொண்டிருக்கின்றனர். பொருளாதாரத்தின் வளர்ச்சிவேகம், வரவு செலவு குறை நிரப்புதல், உற்பத்தி திட்டங்கள் போன்ற பன்முக சொற்றொடர்களுக்கு அமைச்சர் ஜி.எல் எனட் கம்பனி இப்போது அதிவேகமாக வர்ணம் தீட்ட ஆரம்பித்திருக்கின்றது.

வர்ணங்களைத் தீட்டுவதற்காக இருக்கும் ஆயுட்காலம் எவ்வளவு? தென் கொரியாவிலும், மலேசியாவிலும், இந்துனேசிய உட்பட இன்னும் பல நாடுகளில் இந்த வர்ணம் தீட்டுவதில் இதைவிட நவீன முறையில் செய்தார்கள் என்பது எமக்குத் தெதியாததல்ல. ஆனால் இப்போது அந்த முதலாளித்துவ நாடுகளில் சாயம் வெளுத்துவிட்டது. அதேவேளை, இலங்கை முதலாளித்துவ தலைவர்கள் இன்னும் சாயம் பூசிக்கொண்டிருக்கின்றனர். இதன்மூலம் ஏற்படப்போகும் பயன் என்ன?

உயிரோடு இருக்கின்ற மக்களுக்கு குறைந்தபட்சம் உயிர் வாழும் உரிமை பறிக்கப்பட்டு மரணத்தை பெற்றுக்கொடுத்துள்ளது இந்த முதலாளித்துவ அமைப்பு. மனித வாழ்க்கையை சீரளித்து, ஏழ்மையின் பாதாளத்திற்கே தள்ளப்பட்டிருக்கும் லட்சக்கணக்கான மக்களை எலும்புக்கூடுகளாக மாற்றியுள்ளது. முதலாளித்துவத்தின் லாபம் ஈட்டும் தொழில் துறையில் இன்று வேலையின்மையே மிஞ்சியுள்ளது.

இன்று வேலையோடு இருப்பவர்களல்ல வேலையில்லாதோரே வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். இன்று குடிசைகளில் வாழ்வோர் நாளை நடுவீதியில் அகதியாக்கப்படுகின்றனர். இந்த அனைத்து அழிவுகளின் மீதே ஆட்சியாளர்கள் வரவு–செலவை கொண்டிருக்கின்றனர். மக்கள் மீது வரி சுமத்தப்படுகின்றது. உடைந்து விழுந்துகொண்டிருக்கும் பொருளாதாரத்தை நிமிர்த்தி வைப்பதற்காக கோலத்தைக் காட்டுகின்றனர். ஆனால் நெருக்கடி என்பது மிக வேகமாக வளர்கிறது.

'வரவு–செலவு' என்பது இந்த உடைவுகளை நிரூபிக்கும் சாதனமேயன்றி, எதிர்வரும் வருடங்களில் நாட்டை முன்னேற்றமடையச் செய்யும் சாதனமல்ல. எவ்வளவு வேகமாக முன்வயிறு பின் வயிற்றோடு ஒட்டிப்போகிறது என்பதையே வரவு–செலவு மூலம் கோடிட்டுக் காட்டும் கருவியாகும். முதலாளிகளுக்கு, பல்தேசிய நிறுவன எஜமான்களுக்கு எவ்வளவு தொகையான லாபத்தைத் தேடிக்கொள்ள முடியும் என்பதே முதலாளித்துவ வரவு–செலவு திட்டத்தில் நிறைவேற்றப்போகும் கடமையாகும். இதைவிட வேறு என்ன நடக்க முடியும்? இக்காரணிகள் தொடர்பாக ஒடுக்கப்பட்ட மக்கள் செய்யவேண்டிய வழியும் எத்தகைய தலைமைத்துவத்தின் கீழ் அணிதிரள வேண்டும் என்பதை வரவு–செலவு அறிக்கையின் மூலம் வழிகாட்டும் முறையாகும். அதன் மூலம் இலங்கை ஒடுக்கப்பட்ட மக்கள் முடிவெடுத்து வெற்றி பெறுவார்களானால், முதலாளித்துவ வாதிகளின் வரவு–செலவு அவர்களது மரண அறிக்கையாக மாற்றியமைக்க முடியும்.

## பலவந்தமாக பிரச்சாரத்தை பெறும் ரத்வத்தை!

கடந்தவாரம் யுத்தத்தினால் ஏற்பட்ட தோல்வியை மூடிமறைப்பதற்காக அமைச்சர் ரத்வத்தை மாங்குளத்திற்கு சென்று, அங்குள்ள ராணுவ சிப்பாய்களை சந்தித்து பேசிச் செயற்படுவதை ரூபவாஹினி ஊடாக காண்பிக்கப்பட்டிருப்பது அமைச்சர் ரத்வத்தை நேரடியாக தலையிட்டதன் மூலமே என்று தெரியவருகிறது. அமைச்சர் ரத்வத்தை ராணுவ உடையணிந்துக்கொண்டு ராணுவ வீரர்களை சந்தித்து குறைபாடுகள் அனைத்தையும் தேடிப்பார்ப்பதாக கூறிய செய்தி ரத்வத்தை விரோத அணிக்கு பாரிய கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுதொடர்பாக ஜனாதிபதி நேரடியாக மங்கள சமரவீரவிடம் கேட்டுள்ளார். அதை தடுப்பதற்கு இப்போது முடியாதென்பது அவர் கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் பலம்வாய்ந்த அமைச்சரொருவர் கூறியவுடன் அரசாங்கத்தின் உள்ளே இருக்கின்ற நெருக்கடியை கவனிக்காது அவர் செல்லும் திசையை நோக்கி ரூபவாஹினி ஊழியர்கள் ஓடுவது பழக்கப்பட்டுள்ளதால் இந்நிலைமை தடுப்பதற்கு முடியாதுள்ளதென மங்கள சமரவீர ஜனாதிபதியிடம் கூறியுள்ளார். அதேவேளை, ரத்வத்தையின் அச்செயல்பாடுகளுக்கு எதிராக தமக்கு சார்பான செல்வாக்கை பெருக்கும் செயற்பாடுகளுக்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும்படி சந்திரிக்கா கூறியுள்ளார். எனவே, கடந்தவாரம் இறந்த இராணுவத்தினருக்கும் யுத்தகளத்தில் இருக்கும் ராணுவத்திற்கும் பதக்கங்களை சந்திரிக்கா தலைமையில் வழங்கியதும் சந்திரிக்கா அநுராதபுரத்திற்கு சென்று

7ம் பக்கம் பார்க்க.......

## சோஷலிச தொழிலாளர் சங்கம் இரண்டு வார அபிவிருத்தி வேலைகள் மும்முரம்

சோஷலிச தொழிலாளர் சங்கம் தனது அங்கத்தவர்களை அதிகரிக்கவும் பண்பு ரீதியில் வளர்க்கும் பாரிய குறிக்கோளை அடைவதற்காக இம்மாதம் 15ம் திகதி முதல் 30 திகதி வரை (ஒக்டோபர்) இரண்டுவார அபிவிருத்தியை செயற்படுத்துகிறது. இந்த இரண்டு வார காலப் பகுதியில் விவாதங்கள், கலந்துரையாடல்கள், கூட்டங்கள், கருத்தரங்குகள் கல்வியும் வெகுஜன செயற்பாடுகள் பலவற்றையும் தயார் செய்திருப்பதாக தெரியவருகின்றது. சோஷலிச தொழிலாளர் சங்கத்தின் எல்லாக் கிளை தாபனங்களும் இந்த இரண்டு வார வேலைத்திட்டத்தில் கலந்துகொள்ளுமென்று சே.தொ.ச. தேசிய அமைப்பாளர் தோழர் கே.டி.லால் காந்த அவர்கள் 'செஞ்சக்திக்கு' தெரிவித்தார்.

## இருளில் மூழ்கிக்கிடக்கும் ஹரஸ்ப்பத்தை பாடசாலை

நுவரெலியா மாவட்ட வலபனை தொகுதியில் ஹரஸ்பத்தை வித்தியாலத்திற்கு வழங்கியிருந்த மின்சாரம் சுமார் இரண்டு வருடங்களாக துண்டிக்கப்பட்டிருந்ததாக அப்பாடசாலை மாணவ மாணவியர் தெரிவிக்கின்றனர்.

குறிஞ்சியின் வலபனை தொகுதியில் (மலை உச்சியில்) அமைந்திருக்கும் ஹரஸ்பத்தை பாடசாலை சில காலங்களில் பனிமூட்டத்தால் முற்றாக மூடப்பட்டு பல மணி நேரமாக பனிமூட்டம் இருளாக மாறுவதால் அவ்வேளையில் பாடசாலை மாணவர்கள் தமது கல்வி வேளைகளை செய்ய முடியாது போகிறது.

அதேவேளை தூர இடங்களிலிருந்து வற்றுள்ள ஆசிரியர்கள் அப்பாடசாலை ஆசிரியர் இல்லத்தில் தங்கியிருப்பதனால் அவர்களுக்கும் மாணவர்களை விட கஷடமான

7ம் பக்கம் பார்க்க....

## "சே" யை படிப்போம் ...உங்களில் "சே"



ஏர்னஸ்டோ சேகுவேரா என்பவர் ஓர் தத்துவக் கடல். நடைமுறையை வாழ்க்கையாக மாற்றிக்கொண்டவர். அவர் உயிருடன் இருந்த யுகத்தின் யுக புருஷன் அவரே. ஏகாதிபத்தியவாதிகள் முதலாளித்துவத்தின் சுரண்டலற்ற மனித குல சமுதாயத்தை உருவாக்குவதே அவர் வாழ்க்கையின் தலையாய நோக்கம். அவர் வாய்சொல் வீரர் அல்ல. அதேபோல் தத்துவார்த்த அலங்கார கண்காட்சிகளை காட்டி வானத்தில் கரணமடிக்கும் மனிதருமல்ல. வாழ்க்கை, நடைமுறை, சித்தாந்தம் ஆகியவற்றை விஞ்ஞானமாக மாற்றிகொண்டவர். வைத்தியராகவும், கெரில்லாப் போர் வீரனாகவும் நாட்டை கட்டியெழுப்பும் பணியை தமது தோழில் சுமந்த அமைச்சராகவும் ராஜதந்திரியாகவும் எதிகளை வன்மையாக எதிர்த்த போர் வீரனாகவும் அதேபோல் தோழமையை முன்னெடுத்த மனிதாபிமானியாகவும் போன்று எல்லாவத்தையும ஒன்று இரண்டல்ல முழு மனிதனாக வாழ்ந்தவர். 'சே' யை கொன்று பலவருடங்கள் கடந்துவிட்டாலும் அவரை பற்றிய புரிதலில் இன்னும் மனிதகுலம் முழுமையடையவில்லை. அவர், படித்து நிறைவு செய்யமுடியாத மாபெரும் புத்தமாகும். ஒரு முறை வாசியுங்கள். இரண்டாவது முறை வாசியுங்கள். மூன்றாவது முறையும் வாசியுங்கள் இச்சந்தர்ப்பங்களில் உங்களை சந்திக்கும் 'சே' முன்பைவிட செல்வாக்கானவர். 'சே' உங்களில் பாதிப்பை ஏற்படுத்துவார். அப்பாதிப்பின் மூலம் 'சே' நீங்கள் படிப்பீர்கள். தேவைப்படுவதெல்லாம் 'சே' ஐ 'சே' மூலம் தெரிந்கொள்வதே. (1965 இல் அவர் குடும்பத்தினருக்கு எழுதிய கடிதம் கீழே தரப்படுகிறது)

*என் அன்பிற்குரியவர்களே,*

*என் கால்களுக்கடியில் ரோசினான்டேயின் விலா எலும்புகளை மீண்டும் நான் உணர்கிறேன்.கேடயத்துடன் மீண்டும் என் பயணம் தொடர்கிறது.*

*சுமார் பத்து வருடங்களுக்கு முன்பு இதே போல் விடைபெற்று,உங்களுக்கு நான் ஒரு கடிதம் எழுதியிருந்தேன்.அதில் நான் ஒரு சிறந்த படைவீரனாகவும்,சிறந்த மருத்துவராகவும் இல்லாமல் இருந்ததற்காக வருந்தி எழுதியிருந்ததை இப்பொழுது நினைவு கொள்கிறேன்:பின்னர் கூறியதை பற்றி நான் இப்போது கவலைபடுவதில்லை.ஆனால் இன்று,நான் அவ்வளவு மோசமான படைவீரன் அல்ல.*

*சுருக்கமாக கூறினால்,எதுவும் மாறிவிடவில்லை.எனது நம்பிக்கை இன்னும் உறுதிப்பட்டுள்ளது.என்னுடைய மார்க்சியம் இன்னும் ஆழமானதாகவும் தூய்மையானதாகவும் மாறிவிட்டது என்பதை தவிர,சுதந்திரத்திற்காக போராடும் மக்களுக்கு ஆயுதபோராட்டம் மட்டும்தான் ஒரே தீர்வு என்பதில் நான் உறுதியாய் உள்ளேன்.அந்த நம்பிக்கையின் நடக்கவும் செய்கிறேன்.*

*என்னை ஒரு சாகசகாரன் என்று பலர் அழைக்கலாம்.நான் சாகசகாரன்தான்.ஆனால் ஒரு வித்தியாசம்,தன்னுடைய அசைக்கமுடியாத நம்பிக்கைகளை நிரூபிப்பதற்காக தன்னையே அர்ப்பணம் செய்துகொள்ள தயங்காத சாகசகாரன்.*

*ஒருவேளை இதுவே என் கடைசி கடிதமாகவும் இருக்கலாம்.இது என்னுடைய குறிக்கோள் அல்ல. ஆனால் நடக்க இருப்பதை தர்க்கரீதியாக ஆராய்ந்து பார்த்தால் அப்படிதான் தோன்றுகிறது.அப்படி நடக்குமெனில் என்னுடைய கடைசித்தழுவலை ஏற்றுக்கொள்ளுங்கள்.*

*நான் உங்களையெல்லாம் ஆழமாக நேசிக்கிறேன்.அதை எப்படி வெளிப்படுத்துவது என்பதுதான் தெரியவில்லை.நான் என்னுடைய வழியில் நடப்பது பற்றி மிகவும் தீர்மானமாக இருக்கிறேன்.ஆனால் பல சமயங்களில் நீங்கள் என்னை சரிவர புரிந்துகொள்ளவில்லை என்றே எண்ணுகிறேன். என்னைப் புரிந்துகொள்வது சுலபமாக இல்லாதிருக்கலாம்.ஆனால் இப்பொழுது என்மீது நம்பிக்கை வையுங்கள்.அது மட்டும் போதும்.*

*தொய்ந்துபோன எனது கால்களையும், ஓய்ந்துபோன எனது நுரையீரல்களையும் எனது மனஉறுதி நிமிர்த்திவைக்கிறது.அப்படிப்பட்ட மனஉறுதியை நான் ஒரு கலைஞனின் நுட்பத்தோடு செதுக்கி முழுமையாக்கியுள்ளேன்.*

*இருபதாம் நூற்றாண்டின் இந்த சிறிய போராளியை அவ்வப்போது நினைத்துக்கொள்ளுங்கள்.சீலியா,ராபார்ட்டோ, ஜான் மார்ட்டின்,போட்டாடின், பீட்ரீஸ்,மற்றும் அனைவருக்கும் எனது அன்பு முத்தங்கள்.*

*அன்புப் பெற்றோர்களே,உங்களுக்கு கீழ்படிந்து நடக்காத,இந்தத் தறுதலைப் பிள்ளையின் தழுவலை ஏற்றுக்கொள்ளுங்கள்.*

–ஏர்னஸ்டோ–

1965 ஆண்டின் மத்தியில் எழுதப்பட்டது.

கொழும்பு 10 பஞ்சிகாவத்தை வீதி, இல:198–19ல் வசிக்கும் [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.